உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்

இது

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்

எனப் பெயரிய

## சைவ மஹா சபையின்

மாதாந்தப் பத்திரிகை.


| மலர் 8 | துந்துபிஹு பங்குனிமீ<br>1923ஹு மார்ச்மீ | இதழ் 12 |
| --- | --- | --- |


| உள்ளுறை | பக்கம். |
| --- | --- |

| சிவஞானபோதம் ... ... ... ... | 217 |
| தக்ஷிணாமூர்த்தி ... ... ... ... | 221 |
| தமிழ் வளர்ச்சி ... ... ... ... | 224 |
| சுப்பிரமணிய பராத்துவம் ... ... ... | 229 |
| மார்கழிப் பிள்ளையார் ... ... ... | 231 |
| இரக்ஷணிய சேனையின் அக்கிரமங்கள் ... ... | 233 |
| வேதம் ... ... ... ... ... | 236 |
| தீர்த்தயாத்திரை ... ... ... ... | 238 |
| வட திருமுல்லைவாயில் வசந்த மகோற்சவம் ... ... | 239 |
| சென்னை சிவனடியார் திருக்கூட்டத்தின் 24-வது வருடப் பூர்த்தி மகோற்சவம், நன்கொடை ... ... | 240 |


இஃது

தேவகோட்டை

ஸ்ரீமான் மெ. அரு. நா. இராமநாதன் செட்டியாரவர்களுக்குச்

சமர்ப்பிக்கப்பெறுவது.

---


பத்திரிகாசிரியர்:

இருக்கம் - ஆதிமூல முதலியார்,

(Retired Accountant, Military Accts., Department)

நெ. 43, பாளையப்பன் வீதி, எழுகிணறு, சென்னை.


---


சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை.

**1923**

தபாற்கூலி உட்பட வருடச்சந்தா ரூபா ஒன்றரை.

உ

சிவமயம்.

# சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம் வெளியிட்டுள்ள நூல்கள்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| "சைவம்" என்னும் மாதாந்தரப் பத்திரிகை (1915ஆம் முதல் 1919ஆம் வரையில் வெளிவந்தவை.) விலை | 6 | 0 | 0 |
| காலிகோ கட்டடம் செய்தது | 1 | 8 | 0 |
| ஒவ்வொரு வருடப் பத்திரிகை | 1 | 8 | 0 |
| "சைவம்" நிகழும் வருடப் பத்திரிகை வருடச்சந்தா | 0 | 1 | 0 |
| ஞானப்பிரகாச சம்பாஷணை | 0 | 0 | 6 |
| ஞானானந்த சம்பாஷணை | 0 | 0 | 6 |
| ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் | 0 | 0 | 6 |
| விவாகவிதியும் கலியுக தருமமும் | 0 | 1 | 6 |
| சைவ சமயிகளின் கடமை | 0 | 1 | 6 |
| கோபப் பிரசாத உரை | 0 | 0 | 6 |
| சிவநின்மாலிய மான்மியம் | 0 | 4 | 0 |
| திருமுறைப் பெருமை | | | |

---

# "சைவம்"

## சந்தா விவரம்

வருடம் ஒன்றுக்கு தபாற் கட்டணம் உட்பட

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இந்தியாவும், சிலோனும் .... ... | ரூபா | 1 | 8 | 0 |
| வெளி தேசங்களுக்கு ... ... | ,, | 2 | 0 | 0 |
| தனிப்பத்திரிகை ... ... | ,, | 0 | 3 | 0 |
| மாதிரிப்பிரதி ... ... | ,, | 0 | 3 | 0 |

## விளம்பர விவரம்

| | | ஒரு மாதத்திற்கு | | | ஒரு வருடத்திற்கு | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு ... | ரூபா | 5 | 0 | 0 | 35 | 0 | 0 |
| அரை பக்கத்திற்கு ... | ,, | 3 | 0 | 0 | 25 | 0 | 0 |
| கால் பக்கத்திற்கு ... | ,, | 2 | 0 | 0 | 15 | 0 | 0 |

பத்திரிகை வருடந்தோறும் சித்திரைமீ முதல் பங்குனி வரையில் ஒரு புத்தகமாகுமாறு பக்கங்களுக்கு இலக்கமிடப்படுவதனால், சந்தாதாரர்களுக்கு சித்திரை மாதப்பத்திரிகை முதலாகவே எல்லாப் பத்திரிகைகளும் தரப்படும்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சைவம்

இது

## சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்

எனப் பெயரிய

## சைவ மஹா சபையின்

மாதாந்தப் பத்திரிகை

---

துந்துபி௵ 1922 - 23

## எட்டாவது மலர்

---

இது

தேவகோட்டை சைவத்திருவாளர்

ஸ்ரீமான்-மெ. அரு. நா இராமநாதச் செட்டியார் அவர்களுக்குச்

சமர்ப்பிக்கப்பெற்றது.

---


பத்திரிகாசிரியர் :

இருக்கம் - ஆதிமூல முதலியார்,

(Retired Accountant, Military Accts , Department)

சைவ நிகேதனம், நெ. 43, பாளையப்பன் வீதி, ஏழுகிணறு, சென்னை.


---


சாது அச்சுக்கூடம், சென்னை.

1923

விலை ரூபா 1-8-0

# அட்டவணை


| உள்ளுறை | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | இடக்கரடக்கல் | ... | 161 |
| 2. | இரக்ஷணிய சேனையின் அக்கிரமங்கள் | ... | 233 |
| 3. | உலகு எதன் காரியம் | ... | 128 |
| 4. | ஏகாலியச் சிவநேயர்களின் முறையீடு | ... | 94 |
| 5. | கடவுள் அடியார்க்கெளியவர் | ... | 201 |
| 6. | (திருக்)குரக்குத்தளி | ... | 184 |
| 7. | சங்கராசாரியர் சரித்திரம் | ... | 97 |
| 8. | சந்தியாவந்தனம் | ... | 76 |
| 9. | சமரசஞான தீபம் | ... | 38, 56 |
| 10. | சித்தாந்தம் | ... | 83 |
| 11. | சிரார்த்தம் | ... | 80 |
| 12. | சிதம்பரமான்மியம் | ... | 150 |
| 13. | சிவஞானபோதம் | | 1, 25, 49, 73, 217 |
| 14. | சிவஞானபோத முதனூலாராய்ச்சி | ... | 193 |
| 15. | சீவ ஹிம்சை | ... | 140 |
| 16. | சுக்லாம்பரதர சுலோகவிசாரம் | ... | 68 |
| 17. | சுந்தரவல்லியின் நற்போதனை | ... | 35 |
| 18. | சுப்பிரமணிய பாத்துவம் | ... | 228 |
| 19. | சூரியமண்டல வழிபாடு | ... | 187 |
| 20. | சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம் | | 8, 9, 167, 240 |
| 21. | சைவக்கிரியாதிகார நிரூபணம் | | 19, 42 |
| 22. | சைவ சமய சாரம் | ... | 59 |
| 23. | சைவப்பேராசு | ... | 145 |
| 24. | சைவர்கள் வணங்குந் தெய்வம் | ... | 190, 213 |
| 25. | ஞானோற்பத்தி | ... | 180 |
| 26. | தமிழ் வளர்ச்சி | ... | 224 |
| 27. | தமிழில் மேல் நாட்டுச் சாத்திரச் சொற்கள் | ... | 176 |
| 28. | தமிழும் ஆரியமும் | ... | 51 |
| 29. | தலையன்பு - பதிவிரதாதர்மம் | ... | 137 |
| 30. | தக்ஷிணாமூர்த்தி | ... | 221 |
| 31. | திருவாரூர் பங்குனி உத்தரமகோற்சவம் | | 63, 116, 130 |
| 32 | தீர்த்த யாத்திரை | ... | 238 |
| 33. | தேவார வைப்புத்தல விளக்கம் | ... | 3, 45 |
| 34 | நன்கொடைகள் | ... | 216, 240 |
| 35. | நால்வர்முத்தி | ... | 203 |
| 36. | நான் யார்? | ... | 169 |
| 37. | பஞ்சபூத உற்பத்தி | ... | 157 |
| 38. | பிரமாண விளக்கம் | ... | 215 |
| 39. | பொற்கை பாண்டியன் | ... | 90 |
| 40. | மகர சங்கிராந்தி | ... | 154 |
| 41. | மாயாவாத மத நிரசனம் | ... | 31 |
| 42. | மார்கழிப்பிள்ளையார் | ... | 221 |
| 43. | மூடபத்தி | ... | 121 |
| 44. | மெய்கண்டதேவர் அவதாரகாலம் | ... | 163 |
| 45. | விநாயகர் சஷ்டி விரதம் | ... | 27 |
| 46. | வேதம் | ... | 236 |

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சைவம்

| மலர் 8 | துந்துபிஹு பங்குனிமீ<br>1923ஹு மார்ச்மீ | இதழ் 12 |
| --- | --- | --- |

## திருநேரிசை

கற்றிலேன் கலைகள் ஞானங் கற்றவர் தங்களோடும்
உற்றிலே னாதலாலே யுணர்வுக்குஞ் சேய னானேன்
பெற்றிலேன் பெருந்தடங்கண் பேதைமார் தமக்கும் பொல்லேன்
எற்றுளே னிறைவனேநா னென்செய்வான் றோன்றினேனே.

---

## சிவஞான போதம்

பன்னிரண்டாஞ் சூத்திரம்—75-வது பக்கத் தொடர்ச்சி

### நான்காவது ஒழிபு அதிகாரணம்

வழிபடாமை யொழிக—இது சூர்ணிகை.

(இ - ள்.) சீவன் முத்தர்கள் சிவஞானிகளின் திருவேடத்தையும் சிவாலயத்தையும் சிவனெனவே வழிபடும் வழிபாட்டைக் கைவிடாதிருக்கக்கடவர்.

இவ்வதிகரணம் முன் மூன்று அதிகரணங்களினல் உண்டான ஆசங்கையை நீக்குதற்கு அவற்றின் சேடமாயெழுந்ததனுல் ஒழிபதிகாணம் என்னப் பெற்றது.

இதில் 1-வது. தன்னாற் கூறப்படும் பொருள் :—சீவன் முத்தர்கள் முன் மூன்று அதிகரணங்களிற் கூறிய மலங்களைக் களைதல், சிவஞானிகளோடு கூடி வாழ்தல், சிவஞானிகளின் திருவேடத்தையும் சிவாலயத்தையும் சிவனெனவே வழிபடுதல் என்னும் இவற்றை எக்காலத்தும் கைவிடாதிருத்தல் வேண்டும்.

# அட்டவணை

| உள்ளுறை | | பக்கம் |
|---|---|---|
| 1. | இடக்கரடக்கல் | 161 |
| 2. | இரக்ஷணிய சேனையின் அக்கிரமங்கள் | 233 |
| 3. | உலகு எதன் காரியம் | 128 |
| 4. | ஏகாலியச் சிவநேயர்களின் முறையீடு | 94 |
| 5. | கடவுள் அடியார்க்கெளியவர் | 201 |
| 6. | (திருக்)குராக்குத்தவி | 184 |
| 7. | சங்கராசாரியர் சரித்திரம் | 97 |
| 8. | சந்தியாவந்தனம் | 76 |
| 9. | சமரசஞான தீபம் | 38, 56 |
| 10. | சித்தாந்தம் | 83 |
| 11. | சிரார்த்தம் | 80 |
| 12. | சிதம்பரமான்மியம் | 150 |
| 13. | சிவஞானபோதம் | 1, 25, 49, 73, 217 |
| 14. | சிவஞானபோத முதனூலாராய்ச்சி | 193 |
| 15. | சிவ ஹிம்சை | 140 |
| 16. | சுக்லாம்பரதர சுலோகவிசாரம் | 68 |
| 17. | சுந்தரவல்லியின் நற்போதனை | 35 |
| 18. | சுப்பிரமணிய பாத்துவம் | 228 |
| 19. | சூரியமண்டல வழிபாடு | 187 |
| 20. | சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம் | 8, 9, 167, 240 |
| 21. | சைவக்கிரியாதிகார நிரூபணம் | 19, 42 |
| 22. | சைவ சமய சாரம் | 59 |
| 23. | சைவப்பேரரசு | 145 |
| 24. | சைவர்கள் வணங்குந் தெய்வம் | 190, 213 |
| 25. | ஞானேற்பத்தி | 180 |
| 26. | தமிழ் வளர்ச்சி | 224 |
| 27. | தமிழில் மேல் நாட்டுச் சாத்திரச் சொற்கள் | 176 |
| 28. | தமிழும் ஆரியமும் | 51 |
| 29. | தலையன்பு - பதிவிரதாதர்மம் | 137 |
| 30. | தக்ஷிணாமூர்த்தி | 221 |
| 31. | திருவாரூர் பங்குனி உத்தரமகோற்சவம் | 63, 116, 130 |
| 32 | தீர்த்த யாத்திரை | 238 |
| 33. | தேவார வைப்புத்தல விளக்கம் | 3, 45 |
| 34 | நன்கொடைகள் | 216, 240 |
| 35. | நால்வர்முத்தி | 203 |
| 36. | நான் யார்? | 169 |
| 37. | பஞ்சபூத உற்பத்தி | 157 |
| 38. | பிரமாண விளக்கம் | 215 |
| 39. | பொற்கை பாண்டியன் | 90 |
| 40. | மகர சங்கிராந்தி | 154 |
| 41. | மாயாவாத மத நிரசனம் | 31 |
| 42. | மார்கழிப்பிள்ளையார் | 221 |
| 43. | மூடபத்தி | 121 |
| 44. | மெய்கண்டதேவர் அவதாரகாலம் | 163 |
| 45. | விநாயகர் சஷ்டி விரதம் | 27 |
| 46. | வேதம் | 236 |

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சைவம்

| மலர் 8 | துந்துபிஸூ பங்குனிமீ 1923ஸூ மார்ச்மீ | இதழ் 12 |
| --- | --- | --- |

### திருநேரிசை

கற்றிலேன் கலைகள் ஞானங் கற்றவர் தங்களோடும்
உற்றிலே னாதலாலே யுணர்வுக்குஞ் சேய னானேன்
பெற்றிலேன் பெருந்தடங்கண் பேதைமார் தமக்கும் பொல்லேன்
எற்றுளே னிறைவனேநா னென்செய்வான் றோன்றினேனே.

---

## சிவஞான போதம்

பன்னிரண்டாஞ் சூத்திரம்—75-வது பக்கத் தொடர்ச்சி

### நான்காவது ஒழிபு அதிகரணம்

வழிபடாமை யொழிக—இது சூர்ணிகை.

(இ - ள்.) சீவன் முத்தர்கள் சிவஞானிகளின் திருவேடத்தையும் சிவாலயத்தையும் சிவனெனவே வழிபடும் வழிபாட்டைக் கைவிடா திருக்கக்கடவர்.

இவ்வதிகரணம் முன் மூன்று அதிகரணங்களினால் உண்டான ஆசங்கையை நீக்குதற்கு அவற்றின் சேடமாயெழுந்ததனால் ஒழிபதி கரணம் என்னப் பெற்றது.

இதில் 1-வது. தன்னாற் கூறப்படும் பொருள் :—சீவன் முத்தர்கள் முன் மூன்று அதிகரணங்களிற் கூறிய மலங்களைக் களைதல், சிவ ஞானிகளோடு கூடி வாழ்தல், சிவஞானிகளின் திருவேடத்தையும் சிவா லயத்தையும் சிவனெனவே வழிபடுதல் என்னும் இவற்றை எக்காலத் தும் கைவிடாதிருத்தல் வேண்டும்.

2-வது. ஐயப்பாடு:—இம்மூன்றினையும் சீவன் முத்தர்கள் அநுட்டிக்க வேண்டிய விதிகளாக வைத்துக் கூறுதல் பொருந்துமோ, பொருந்தாதோ.

3-வது. பிறர் கூறும் பக்கம்:—இம் மூன்றும் சீவன் முத்தரிடத்தில் இயல்பாகவே அமைந்து கிடத்தலால், முன் மூன்று அதிகரணங்களிற் கூறியனவே சாலும். அவற்றை மீண்டும் அவர்கள் கைக்கொள்ள வேண்டிய விதியாக வைத்துக் கூறுதல் பயனுடைத்தன்று.

4-வது. மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபு:—(உடம்போடு கூடிநின்று, உடம்பு வேறு தான் வேறு என்று பிரிக்க வாராதபடி உடம்பே தானாய் நின்ற உயிர், தத்துவ சோதனையின்கண் அவ்வுடம்பாகாது அதின் வேறுமாயினாற்போல) உயிர்க்குயிராகிய முதல்வன் சித்து சடம் என்னும் இருவகைப் பொருள்களினும் இரண்டறக் கலந்து அவையே தானாயும், அவற்றின் வேறுமாயும் நிற்பன். ஆதலால், முதல்வன் அவையே தானாய் நிற்றலைக்காணும் காட்சியினால் அவனிடத்திற் செய்ய நேரிடும் வழிபாடு, அவன் அவற்றிற்கு வேறாய் நிற்றலைக் காணுங் காட்சியினால் நேர்படமாட்டாது. ஆதலால் முதல்வன் அவைகளுக்கு வேறாய் நிற்றலைக் காணுங் காட்சியின் கண்ணும் சீவன் முத்தர்கள் மலங்களைக் களைதலும், சிவஞானிகளோடு கூடிவாழ்தலும், சிவஞானிகளின் திருவேடத்தையும் சிவாலயத்தையும் சிவனெனவே வழிபடுதலுமாகிய இவற்றைக் கைவிடாது கடைப்பிடித்தல் வேண்டுமென மீண்டும் வற்புறுத்தி விதித்தல் பொருத்தமுடைத்தே.

5-வது. இயைபு.—உதாரண வேண்பா

அதுவிது வென்ற ததுவல்லான் கண்டார்க்
கதுவிது வென்றதையு மல்லான்—பொதுவதனி
லத்துவித மாதலகண்டமுந் தைவமே
யத்துவிதி யன்பிற் றொழு.

(இ - ள்.) கண்டார்க்கு=(முதல்வன் சடம் சித்து என்னும் இருவகைப் பொருள்களிடத்தும் நிற்கும் நிலைமை) அறியப் பெற்றோர்க்கு—அது இது என்றது அல்லான்=(கண்ணும் சூரியனும் கலந்து நிற்பினும் கண்வேறு சூரியன் வேறு காணப்படுமாறுபோல) அதுவும் இதுவும் எனப்பிரித்து ஓதப்படும் பேதநிலைமை யுடையவனுமல்லனாய்—அது (என்றது அல்லான்)=(உடலும் உயிரும் பிரிக்க முடியாதவாறுபோல) எல்லாம் முதல்வனே என்று சொல்லப்படும்

அபேத நிலைமை யுடையவனு மல்லனாய்—அது இது என்றதையும் அல்லான் =(குணமும் குணியும் ஒருவாறு பேதமும் ஒருவாறு அபேதமு மாதல்போல்) முதல்வனாகிய இப்பொருள் என்று பிரிக்க முடியாமை பற்றிக் கூறப்படும் பேதாபேத நிலைமை யுடையவனு மல்லனாய்—பொது வதனில் அத்துவிதம் ஆதல், அகண்டமும் தைவமே =(உயிரின் அறிவும் கண்ணொளியும் கலப்பால் அபேதமாயும், பொருளின் தன்மையால் பேதமாயும், உடனாகச் செல்லுந் தன்மையால் பேதா பேதமாயும் நிற்குமாறுபோல) பேதம் அபேதம் பேதாபேதம் ஆகிய மூன்றுக்கும் பொதுவாய் அம்மூன்றுமாகிய அத்துவித நிலைமை யுடையானாய் நிற்பன். ஆதலால், எல்லாப் பொருளும் அவன் வடிவமேயாம்—(ஆயினும்)-அத்துவிதி அன்பின் தொழு =(அப்பொருள்கள் எல்லாவற்றுள்ளும்) கண்டமாத்திரத்தே அன்பு உண்டாகும் இடம் எதுவோ அவ்விடத்தில் அத்துவித சித்தாந்தத்தைப் பெற்றுடைய நீ முதல்வனை வழிபடுவாயாக (எ-று.)

இதனால் பசுவின் உடல் முழுதும் வியாபித்திருப்பினும் காணப்படாத பால், கன்றை நினைத்த மாத்திரத்தில் மடியின்கண்ணே விம்மி யொழுகுமாறு போல், எங்கும் நிறைந்திருக்கும் இறைவன் அன்பர் பொருட்டுத் திருக்கோயிலினுள்ளிருக்கும் திருமேனியினிடமாக வெளிப்பட்டருளுவன் என்பதையுணர்த்தி, எங்குமா யெல்லாமாயிருக்கு மிறைவனை எந்தவிடத்திலும் வழிபடலாமென விதித்தல் பொருந்தாதோ என்னும் ஆசங்கையை அகற்றியவாறும். (அதாவது சிவாலயத்திற் செய்யும் வழிபாடே அனுபவமான அத்துவித ஞானத்தை நிலைக்கச்செய்யும் என்பதை யுணர்த்தியவாறும்.)

முதலடியில் உள்ள அது இது என்பது அதுவும் இதுவும் என்னும் பொருளைத் தருதலால் உம்மைத் தொகை. இரண்டாமடியிலுள்ள அது இது என்பது அதுவாகிய இது என்னும் பொருளைத் தருதலால் இருபெயரொட்டுப் பண்புத் தொகை.

அல்லான் என்னும் குறிப்பு வினைமுற்று அல்லானாய் என்னும் பொருளைத்தரும் குறிப்பு வினையெச்சமாய் நின்று அத்துவிதமாதல் என்பதைக் கொண்டு முடிந்தது.

என்றதையும் அல்லான் = என்றதுவும் அல்லனாய். பொதுவதனில் = பொதுவினில். ஆதல் = ஆதலால். தைவம் = தேவனதுடைமை. அன்பிற்றொழு = அன்பு விளையும் இடத்தில் தொழு.

(தொடரும்)

# சந்தாதாரர்களுக்கு விஞ்ஞாபனம்

அன்புடை ஐயன்மீர்,

இவ்விதழோடு எட்டாவது மலர் இறைவனருளால் முட்டுப் பெருமல் முற்றுப்பெற்றது. ஒன்பதாவது மலரின் முதலாவதிதழ் சிகழும் சித்திரைமீ முடிவில் அல்லது வைகாசிமீ ஆரம்பத்தில் வழக்கப்படி வி. பி. தபாலில் அனுப்பப்படும். அதனைத் திருப்பாமல் வாங்கிக்கொள்வீர்களென்று எதிர்பார்க்கின்றோம்.

நம் தமிழ்நாட்டில் "சித்தாந்தம்", "சைவம்" என்னும் இரண்டு பத்திரிகைகள் சைவசமயிகட்கு இரு கண்களாக இருந்தன. இவற்றுள் "சித்தாந்தம்" மறைதலும் சைவர்கள் ஒரு கண் இழந்தவர்களானார்கள். சைவமும் மறைபுமானல் மற்றொரு கண்ணையும் இழந்தவர்களாவார்கள். ஆதலால், சென்ற வருடத்தில் எமக்கு நேரிட்ட பல இடையூறுகளையும் இறைவனருளால் கடந்து எட்டாவது மலரைப் பூர்த்திசெய்தோம்.

பலசரக்குக் கடைகளிலும், மச்சம், மாமிசம், கள்ளு, சாராயம் முதலியன விற்கும் கடைகளிலும் ஜன நெருக்கம் அதிகமாயிருப்பது இயல்பு. உயர்ந்த ஒற்றைச் சரக்குள்ள கடை இருக்குமிடம் அறிதலும் அரிது. நமது சைவமோ பலசரக்குக் கடையன்று. சித்தாந்தத் தேன் ஒன்றையே தரும் மிகப் பெருஞ் சிறு கடை. "சித்தாந்தத் தேனமுதருந்தினர் சிலரே." அன்றியும்,

சிவாலயத்துள் நுழைந்தும் சிவலிங்கப் பெருமானை வணங்காமல் சனியனை ஆயிரம்முறை வலம்வந்து வணங்கி வழிபடும் சனங்கள் மிகுந்துள்ள காலமிது. தருமகர்த்தர்கள் சனங்களுக்குச் சிவதருமத்தைப் போதித்தலைக் கைவிட்டு, தாசி நாட்டியங்கள் வாண வேடிக்கைகள் முதலியவற்றால் திருவிழாக்களுக்குச் சனங்களைத் திரட்டுங் காலமிது. சைவமும் வேண்டாம் வைணவமும் வேண்டாம் சமரசமே வேண்டும் என்னும் சமரச ஞானிகள் மிகுந்துள்ள காலமிது. சைவ சமயாசாரியர்களிடத்திலும் வேதாகமங்களிடத்திலும் குற்றங் காட்டவல்ல புலவர் சிகாமணிகள் புறப்பட்டுள்ள காலமிது. முன்னோர் அநுட்டானங்கள் மூட வநுட்டானங்களெனப் போதிக்கும் முற்றறிவினர் மிகுந்துள்ள காலம் இது. தன்கணவன் எனவும் அயலான் எனவும் வேற்றுமை பாராட்டாது எல்லாப் புருஷருடனும் மங்கையர் உல்லாசமாய்க் கூடிக் கை குலுக்குங் காலமிது. இக்காலத்தில் கணவனையன்றி வேறொருவனைக் கனவிலுங் கருதாத கற்புடை மங்கைபோல் சைவத்தின் சீர்பாடன்றி

வேறொன்றையும் எடுத்துப் பேசாத நம் சைவப் பத்திரிகை உலகில் பரவுதலரிதே. பொது மகளுக்கு எவரும் சென்று பொருள் கொடுப் பர். அவளை யலங்கரித்துப் பார்த்து மகிழ்வர். கற்புடை மகளிரை எவரும் நெருங்கார். ஆதலால் சைவம் எனப் பெயரிய இக்கற்பரசிக்கு எட்டு வயதாயும் எந்தச் சைவச் சீமானும் இதுவரையில் இவளைப் போஷித்தல் தன் கடமையெனக் கொள்ளாமை அதிசயமன்று. ஆத லால் இவள் செவிலித் தாய்மார்களாகிய சந்தாதாரர்கள் எட்டாம் வரு டத்தைப் போலவே ஒன்பதாவது வருடத்திலும் இப் பெண்மணி தங்களிடம் வந்து இறைவன் புகழை யெடுத்து விளம்புவதைக் கண்டு களிகூர்கவெனப் பிரார்த்திக்கின்றோம்.

பத்திரிகாசிரியர்.

---

## தக்ஷிணாமூர்த்தி

கல்லாலின் புடையமர்ந்து நான்மறை யாறங்கமுதற் கற்றகேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய் மறைக்கப்பாலாய்
எல்லாமா யல்லவுமா யிருந்ததனை யிருந்தபடி யிருந்துகாட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமனினைந்து பவத்தொடக்கை வெல்வாம்.

கல்லால நிழலின்கண்ணே தக்ஷிணாமூர்த்தியா யெழுந்தருளியிருந்த சிவபெருமானிடத்தே வேதநூற் பொருளைப்பெற்ற சனகர், சனந்தரர், சனாதரர், சனற்குமாரர் என்னும் முனீந்திரர் நால்வரும் மாயையினாலே ஞானநிலை பெறாதவர்களாய் பின்னும் நெடுங்காலந் தவஞ்செய்து, திருக் கைலாசமலையை யடைந்து, முதற் கோபுரவாயிலில் எழுந்தருளியிருக் கும் சித்தாந்த சைவ சிகாமணியாகிய திருநந்திதேவரை வணங்கினார் கள். உடனே அவர் அம் முனீந்திரர்களைக் கருணையோடும் கோயிலி னுள்ளே அழைத்துக்கொண்டு சென்றார். முனீந்திரர்கள், பிரம விட்டு ணுக்களுக்கும் வேதங்களுக்கும் எட்டாத ஞான நாயகரைத் தூரத்தே தரிசித்து, மொழிதடுமாற, மெய்மயிர்பொடிப்ப, ஆனந்தக் கண்ணீர் பெருக, அழலிடைப்பட்ட மெழுகுபோல நெஞ்சம் நெக்குருக, இருகைகளையுஞ் சிரமீது குவித்துக்கொண்டு திருமுன் சென்று, திரு வடிகளைப் பலகாலும் நமஸ்கரித்து எழுந்து அஞ்சலிசெய்து நின்று, சிவபெருமானது நிரதிசயமாகிய ஐஸ்வரியத்தை உணர்த்தாநின்ற உப நிடதங்களாலே துதித்தார்கள். அதன் பின்பு ஞானானந்த மயமாகிய முழுமுதற் கடவுளே, அடியேங்கள் வேதங்களையும் உபநிடதங்களையும் நெடுநாள்வரையும் ஓதியும் ஞானம் நிலைபெறாதேமாயினேம். அருட்

கடலே, ஏகாத்மவாத சுருதி முதலிய சுருதிகளாலே மதிமயங்குகின்றது; பெருங் கருணைகூர்ந்து அம்மயக்கத்தை நீக்கியருளுக வென்று விண்ணப்பஞ் செய்தார்கள். அடியார்க் கெளியாராகிய பரம கருணாநிதி அம்முனீந்திரர்கள்மீது திருநோக்கம் வைத்து, அன்பர்களே, உங்கள் மதிமயக்கம் நீங்கும் வண்ணம் நாம் இரகசியமாகிய திவ்வியாகமத்தை யுபதேசிப்போம்; இருங்களென்று திருவாய் மலர்ந்தருளினார். அவர்கள் பேருவகைபூத்து, எம்பெருமானுடைய திருவடியின் முன் இருந்தார்கள்.

கிருபாசமுத்திரமாகிய சிவபெருமான் தமது சந்நிதியிலிருக்கின்ற சனகர் முதலிய முனீந்திரர்கள் நால்வருந் தொழுது கேட்ப, திவ்வியாகமங்களிலே சொல்லப்படும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்களுள்ளும் சரியை முதலிய முதன் மூன்று பாதத்தையும் உபதேசித்தருளினார். அதுகேட்ட முனீந்திரர்கள், கருணைக்கடலே, இனி ஞானபாதத்தையும் உபதேசித்தருளுக வென்று விண்ணப்பஞ் செய்தார்கள். சிவபெருமான் திருநகைசெய்து, ஞானபாதம் ஏனையன போல வாயினாற் சொல்லற்பாலதன்று; அது இப்படி இருத்தலேயாமென்று திருவாய்மலர்ந்து, அந்நெறியை அவர்களுக்கு உணர்த்தும் பொருட்டு, தமது திருமார்பின் கண்ணே ஒரு திருக்கரத்தைச் சேர்த்தி மௌன முத்திரைகாட்டி ஒரு கணம் ஒரு செயலுமின்றி யோகஞ்செய்வார்போல் எழுந்தருளியிருந்தார். அதுகண்ட முனீந்திரர்கள் தங்கள் தங்கள் உள்ளம் ஒடுங்கப்பெற்று, சிவஞானத்தை யடைந்து சித்திரப் பாவைபோல அசைவற்றிருந்தார்கள். சிவபெருமான் இவ்வண்ணம் எழுந்தருளியிருக்கும் கணமொன்றினுள்ளே பிரம விட்டுணு முதலிய தேவர்களுக்கெல்லாம் பற்பல யுகங்கள் கழிந்தன.

சிவபெருமான் சனகர் முதலிய முனிவர்கள் நால்வரையும் நோக்கி, மைந்தர்களே! ஞானயோகம் சொல்லற்பாலதன்று; அது இவ்வாறு மௌனத்தோடிருந்து நம்மை யறிவதேயாம் என்று திருவாய்மலர்ந்தருளினார். அதுகேட்ட முனிவர்கள் தெளிந்து மனமகிழ்ந்து சிவபெருமானை மெய்யன்போடு வணங்கி நின்று கிருபாசமுத்திரமே, அடியேங்கள் முன்னை மயக்கம்நீங்கி யுய்ந்தோம் என்று விண்ணப்பஞ் செய்தார்கள். சிவபெருமான் இனி நீங்கள் நிஷ்டையிலிருந்து நம்மைத் தியானித்து நமது சாயுச்சியபதத்தை யடையக்கடவீர்கள் என்று திருவாய் மலர்ந்து விடைகொடுத் தருளினார்.

" கல்லாலின் புடையமர்ந்து" என்னுஞ் செய்யுளின் பொருளாவது; சிவபெருமான் கல்லாலின் நீழலின் கண்ணே தென்முகமாய்

எழுந்தருளியிருந்து, நான்கு வேதங்களையும், ஆறு அங்கங்களையும் வேதாந்தங்களையும் நன்கு அறிந்தவர்களாகிய சனகாதி நால்வர்களுக்கும், வேத வேதாந்தங்களினால் தம்மையும் தலைவனையும் சந்தேக விபரீதமற உணரமாட்டாது மயங்கின மயக்கம் நீங்குதற்பொருட்டு, வாக்கினால் இத்தன்மைத்தென்று சொல்லக்கூடாத பூரணமாயும், வேதங்களினால் அறுதியிட்டுக் கூறமுடியாததாயும், உயிர்ப்பொருள் உயிரில்பொருளாகிய எல்லாம் தன்னையின்றித் தனித்து நில்லாமையினால் அவையாவும் தானாகியும், ஆயினும், அவற்றுள் உயிர்போலப் பிறந்திறந் துழலுதலும், உயிரில் பொருள்போலத் தோன்றி நின்று அழிதலும் இல்லாமையால் அப்பொருள்களுக்கு வேறாகியும் இருந்த தனது சொரூபத்தை இருந்தவாறே திருமேனிகொண்டருளிய முறையில் வைத்துக் காட்டி, அவ்வுண்மையை வாக்காற் சொல்லாது அறிவுக்கறிவாய் நின்று அருளால் அருளிச்செய்தனர். இத்தக்ஷிணாமூர்த்தியை, நாம் ஆராய்ச்சி அறிவாகிய மனத்தால் நினையாது அநுபவ அறிவால் அறிந்து பிறந்திறந் துழலுந் துன்பத்தை வெல்லுவோம் என்பதாம்.

நான்மறை யாறங்கமுதல் என்றதனால் வேதாந்தமுங் கொள்ளப்படும்.

கேள்வி வல்லார்க ளென்றதனால் கேட்டும் மலைவு நீங்காமை பெறப்படும்.

இருந்துகாட்டி யென்று இங்கே பொதுப்படக் கூறினரேனும் எவ்வாறிருந்து காட்டினரென்பது வேதத்துக்குப் பொருள் அருளிச்செய்த படலத்திற் கூறப்பட்டது ஆண்டுக் காண்க. அது,

“ சீதளப்பளிக்கு மேனியும் பளிக்குச் செழுமலை பதித்ததுப்பன்ன
பாதமுஞ் செவ்வாய்மலரு முக்கண்ணும் பங்கயச் செங்கர நான்கும்
வேத புத்தகமும் அமுதகும்பமுந் தன் விழிமணிவடமு மெய்ஞ்ஞான
போத முத்திரையுந் தரித்ததோர் தனிமைப் போதன் முன்றாழ்ந்தெழுந்தேத்தா”

என்பது,

இதனால் முயலகனை மிதித்த திருவடி யொன்றும், வீராசனமான மற்றொரு திருவடியும் வலப்பாகத்திலுள்ள ஒரு திருக்கரத்தில் சின் முத்திரையும், மற்றொரு திருக்கரத்தில் உருத்திராக்க மணிவடமும், இடப்பக்கத்தில் உள்ள ஒரு திருக்கரத்தில் அமுதகும்பமும், மற்றொரு திருக்கரத்தில் சிவஞானபோத புத்தகமும் தோன்ற விளங்கியிருந்தார் என்பதாம்.

S. V. R. M.

# தமிழ் வளர்ச்சி

## (ஸ்ரீமத் த. கைலாச பிள்ளையவர்கள் எழுதியது)

### தமிழை வளர்ப்பவர் யார்?

இனித் தமிழை வளர்ப்பவர் ஆர்? எத்தனையோ பொருள்களுக்குத் தமிழிலே சொற்கள் இருக்கவும் அவற்றை வழங்காது "கேற்" "லாம்பு" "பிளான்" என்று சொல்லும் நாமா தமிழை வளர்க்க யோக்கியர்! சேதுபதி கலாசாலை என்றொரு பெயரிருக்கவும் அதனை விடுத்துச் சேதுபதி ஹைஸ்கூல் என்று சொல்லும் நாமா தமிழை வளர்க்க யோக்கியர்! எங்கள் பெயரைத் தமிழால் எழுதி, அதற்குமுன் எங்கள் தகப்பன்மாருடைய பீசாட்சரத்தை இங்கிலிசாலும், அவ்விங்கிலிசைப் பின் ஆர். எச். என்ற தொடக்கத்தனவான தமிழாலும், எழுதும் நாமா தமிழை வளர்க்க யோக்கியர்! தமிழ் வழக்கத்தை விடுத்து, இந்து வாலிபர் சங்கம் (Y. M. H. A.) முதலான பெயர்களையும் at home என்ற பெயரையும் வைக்கும் நாமா தமிழை வளர்க்க யோக்கியர்! கிறிஸ்து பிறந்த ஆண்டு மாசம் தேதிகளைப்பற்றி அக்காலத்தில் நூற்று முப்பத்திரண்டு வகையான அபிப்பிராயமிருந்திருக்கவும் அவற்றை மறந்து, 1922 வருஷத்தில் முன்வந்த டிசம்பர் மாதம் 25உ என்றதை நம்பி, எங்கள் கலியப்தம் சாலிவாகன சகாப்தங்களைக் கைவிட்ட நாமா தமிழை வளர்க்க யோக்கியர்! தேவப்பிரதிட்டைக்கும் கலியாணத்துக்கும் எழுதும் விஞ்ஞாபனத்திலும் கிறிஸ்தவ வருஷ மாச தேதிகளை எழுதும் நாமா தமிழை வளர்க்க யோக்கியர்! அலகுல் மூலை முதலிய சொற்கள் அசப்பிய மொழியன்றாய் முன்னோரெல்லாராலும் வழங்கப்பட்டிருக்கவும், அவற்றுள் மூலை என்ற சொல் கிறிஸ்தவருடைய விவிலிய நூலிலும் பல விடங்களில் வழங்கப்பட்டிருக்கவும் அச்சொற்களை நம்முன்னோராகிய தமிழர் வழங்கியது அவர்களுடைய சீர்திருத்தக் குறைவு என்று கருதி, மாமியார் சீலை நெகிழக் கண்டவன் கதைபோல, அதை ஒருவாறு மறைக்க விரும்பி, அச்சொற்கள் வருமிடங்களில் புள்ளிகளிட்டுத் தமிழுடைய மரியாதையைக் காக்கும் நாமா தமிழை வளர்க்க யோக்கியர்! எங்கள் தமிழ் நாட்டிலுள்ள இடப்பெயர்களை இங்கிலிசுப்படி வண்ணார் பொண்ணி, காரைடீவு, மடுரு என்று சொல்லும் நாமா தமிழை வளர்க்க யோக்கியர்! தொல்காப்பியர் திருவள்ளுவர் முதலானவர்கள் சொன்ன பெண்களுக்குரிய நாணமென்னுங் குணத்தைக் களைந்து அவர்களை அரங்கத்தில் இழுத்துவிடும் நாமா தமிழை வளர்க்க யோக்கியர்! "பெரியார்களிட மெனப்படுவன பெண்பால்கட்கு உரிய வழி ஆண்பால்கள்

புகுதலும் ஆண்பால்கட்கு உரிய வழிப் பெண்பால்கள் புகுதலுஞ் செய்யப்படாதன" என்று கடைச்சங்கத்து முதற் புலவராகிய நக்கீரர் சொல்லியிருக்கவும், அதை மறந்து பெண்களை ஆண்மக்கள் கூடும் அரங்கங்களில் இழுத்துவிடும் நாமா தமிழை வளர்க்க போக்கியர்? மகடூஉ முன்னிலை தமிழ் நூல்களில் இருந்ததைக் கண்டு அருவருத்து வெருண்டோடும் நாமா தமிழை வளர்க்க போக்கியர்! செயப்பாட்டை உணர்த்தும் விகுதிகள் படு உண் என்னும் இரண்டுமாம் என்று பழைய இலக்கண நூல்கள் விதிக்கவும், தொல்காப்பியரே தமது முதற் சூத்திரத்தில் "எழுத்தெனப்படுப" என்றும், திருவள்ளுவர் "அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை" என்றும் சொல்லியிருக்கவும், எழுத்தும் அறனும் இன்னும் சாவாமலிருக்கவும், படு என்பது அமங்கலச் சொல்லென்று பயந்து அதனை விலக்கிப் பெறு என்றொரு புதுச்சொற் கொள்ளும் நாமா தமிழை வளர்க்க போக்கியர்! எங்கள் பிள்ளைகளுக்குத் தமிழைப் படிப்பியாது, நீங்கள் இங்கிலீசு நன்றாகப் படித்து உயர்ந்த உத்தியோகங்கள் பெற்று நன்றாகப் பணஞ் சம்பாதித்து அறுபது வயசுக்கு மேலே உபகார வேதனம் பெற்றுக்கொண்டு, ஆறியிருக்கும் போது எங்களைப் போலத் தமிழைப் படியுங்கள் என்று சொல்லிப் பிள்ளைகளை இங்கிலீசு படிப்பிக்கும் நாமா தமிழை வளர்க்க போக்கியர்! கெட்டி! கெட்டி!!

புதுச்சொற்கள் உண்டாக்குகிறது At Home வைக்கிறது (Y. M. H. A.) முதலிய பெயர்களிடுகிறது முதலான வழக்கத்தை நாம் இங்கிலீசுகாரரைப் பார்த்துச் செய்வோமேயானால், நாங்களல்லாமல் apes என்ற குரங்குகள் வேறுமுண்டா.

## தமிழை வளர்ப்பது எதற்காக

இப்பொழுது கூடுஞ் சங்கத்தார்கள் தமிழை எதற்காக வளர்க்க விரும்புகிறார்கள். (க) தமிழ் நல்ல சுத்தமான பாஷை அதற்காக என்பாராயின், அது இப்பொழுது இங்கிலீசுப் பண்டிதர்கள் பலர் கையிலகப்பட்டுத் தன்னுடைய சுய குணங்களை யெல்லாம் இழந்து முற்காலத்திருந்த அமங்கலிகள்போ லிருக்கின்றதே. இப்போது எந்தப் பாலபாடம் இங்கிலீசு நடை கலவாமலிருக்கின்றது. 'அவன் இன்றைக்கு வருவானென்று நான் நினைக்கவில்லை' என்பது சுத்தத் தமிழோ சுத்த இங்கிலீசோ. care of என்னுஞ் சொற்களைத் தமிழில் மொழி பெயர்க்கத் தொடங்கி எத்தனை பண்டிதர்கள் தமிழைப் பழுதாக்கிவிட்டார்கள். செந்தமிழ் என்னும் பத்திரிகை கக-ந் தொகுதி எ-ம் பகுதி

யில் 'அன்றியு மிவ்வருங்கலச் செப்பைக் குறித்து யாவரேனு முன்னர்ச் சந்தேகித்திருப்பரேல் அச்சந்தேகத்தையும் வெளியிடுபவனுகிய செந்தமிழ் மாணவகன்—, (இன்னுர்) என்றது' என்ன ? தமிழ் நடைதானு ! (உ) எல்லாரும் தமிழ் படித்து நம் முன்னேருடைய ஆசாரங்களை அனுட்டிக்க என்பாராயின், கடல் திரை புரண்டு வருவதுபோல இங்கிலீசு நாகரிகம் வரும் இக்காலத்திலும் அது இயலுமா, மாமியாரை வண்டியிலே தம்மோடு கூடப் பக்கத்திலிருத்திக் கொண்டுபோகு மிக்காலத்தில் 'மாமியார் குழுவின் வந்தானுமென மைந்தனிற்ப' என்று கம்பர் சொன்ன பாட்டு என்ன பெறும்; பிறர் எழுந்து போம்போது பிறகே நின்று அழைக்கக் கூடாது தும்மக்கூடாது, இன்னுர் இன்னுருக்கு வழி விலகிக் கொடுக்கவேண்டும் என்பன முதலாக ஆசாரக் கோவை புறநானூறு முதலிய சங்க நூல்களிலே சொன்ன ஆசாரம் எங்கே பறக்கும்; புண்ணிய விருக்ஷங்கள் வழியில் எதிர்ப்பட்டால் அவற்றை வலஞ்செய்து போதல் வேண்டும் என்பது இங்கிலீசு science அதிகப்பட்ட பின்னரும் நடைபெறுமா. நவீன ஆசாரங்களை இனித் தடுக்க முடியுமா. நீதித்தலங்களிலே பிறக்கிராசிமார் my brother, my father-in-law முறை சொல்லுவார்களாம்; பழைய தமிழ் நூல்களைப் பூர்வத்துத் தமிழருடைய சரித்திரமறியப் படிப்பதன்றி அவற்றின்படி நடக்க இனி வராது. சைவ வினவிடைகள் பாடே இப்போது அப்படியிருக்கின்றது.

நம்முன்னேர்கள் சௌசம் பண்ணுகிறவர்களாம்; கோயில்களென்று சொல்லப்படும் இடங்களிலே போய் விழுந்து கையைக் காலைப் புரட்டிக் கும்பிடுவார்களாம்; வேட்டி கட்டுகிறவர்களாம்; அதுவுந் தாங்களே தோய்த்துக் கட்டுகிறவர்களாம்; நாயகி நாயகனேடு கூட விருந்து போசனம் பண்ணுது அவன் உண்டபின் உண்ணுகிறவளாம்; ஆடவர் தலையிலே குடுமி யென ஒன்று வைத்திருந்தவர்களாம்; கலியாணம் முடியுமுன் பெண்ணைப் புருஷன் காண விடமாட்டார்களாம் என்று நம் முன்னேரைப் பரிகாசம் பண்ணுவிக்க விரும்பித் தமிழைப் படிக்கச் சொல்லுகிறேம் என்பாராயின், அது சரி. அப்படியன்று: அஞ்சனம் போட்டுப் பார்த்து எந்த இடத்திலே புதையல் இருக்கிறதென்று அறியத் தமிழிலே விதியிருக்கிறதாம் அதற்காக என்பாராயின், அதுவுஞ் சரிதான்.

இனிக் காலவாதிகளெனச் சிலர் தோன்றித் தமிழ் நூல்களிலுள்ள விசுவாசத்தைக் கெடுக்கிறுர்கள். இவர்கள், தமிழிலே காலக் கணக்கு ஒன்றுக்கு மில்லையென்று மிகப் பரிதாபப்பட்டுத், தமிழ் நூல்

களுக்கு மாத்திரமன்று தமிழ்ப் பாஷைக்கும் காலக்கணக்கு எடுக்கிறோமென்று தொடங்கி ஏதோ a c. b c. என்கிறார்கள். இவர்கள் எந்தக் காலத்திலாவது உண்மை கண்டு பிடிக்கப்போகிறதில்லை. இந்தியருடைய காரியங்கள் centuries ஆல் அளக்கப்படுவனவல்ல. Thousandries ஆல் அளக்கப்பட வேண்டியவை. இக்கால வாதிகள் செய்வது மேலும் மேலும் சந்தேகங்களை உண்டாக்கிவிடுவ தொன்றேபாம். பரிபாடலுடைய காலம் இன்னதென்று செந்தமிழ்ப் பத்திரிகையில் ஒருவர் வெகு பிரயாசப்பட்டு நாட்டினார். அடுத்த பத்திரிகையில் வேறொருவர் அதை மிக எளிதிற் பிடுங்கிவிட்டார். இப்படியே காளிதாசனுடைய காலம் ஆராயத் தொடங்கினவர்கள் பதின்மூன்று மாதிரி சொல்லியிருக்கிறார்கள். சிலருடைய கணக்குக்கிடையில் ஆயிர வருஷ வித்தியாசமுமுண்டு. இவர்களுடைய தொகையால் இவர்கள் சொல்லும் காலத்தொகையைப் பிரிக்க வருஞ் சராசரியே காளிதாசனுடைய காலமென்று நிச்சயிப்பதே இனி முறையாகும். மேலைத் தேச பண்டிதர்கள் இப்பூமிக்குச் சாதகமெழுதத் தொடங்கிச் சில வேலைகள் செய்து வருகிறார்கள். அது முடிந்தபின் நம்முடைய காலவாதிகள் இதிற் றலையிடுவது நன்று. முன்னிருந்த தமிழருக்கு நூல்கள் செய்யும்போது காலஞ் செல்ல வேண்டுமென்பது தெரியுமென்பதும் அவர்கள் அப்படிச் சொன்னார்களென்பதும் நன்னூல் சொன்ன "காலங்களனே" என்ற சிறப்புப்பாயிரத் திலக்கணத்தால் இனிது விளங்கும்.

காலத்தில் மாத்திரமோ இடத்திலுஞ் சந்தேகம். மனுநீதி சண்டசோழர் பிள்ளையைத் தேர்க்காலில் வீழ்த்திக் கொன்றது சோழநாட்டிலென்று பெரிய புராணஞ் சொல்லுகின்றது. ஆருகத சரித்திர நூலாகிய சிலப்பதிகாரமும், பௌத்த சரித்திர நூலாகிய மணிமேகலையும் இதனை வற்புறுத்தும். இது இலங்கையிலே எல்லாளன் (ஏலேலன்) என்பவன் செய்ததென்று மகா வம்மிசம் என்னும் சிங்கள சரித்திரம் சொல்கின்றது. அங்கேயும் நடந்தது தான். இங்கேயும் அந்தப்படியே ஒன்று நடந்தது என்று சொல்லுவது தான் இதற்குச் சமாதானம் போலும். மகா வம்மிசந் தான் எழுதப்படு முன் ஆயிரத்தைஞ்ஞூறு வருஷத்தில் நடந்த கதைகளையுஞ் சொல்லுகின்றது. இவைகளெல்லாம் சரியாகத் தான் இருக்குமோ, இப்போது யாழ்ப்பாணம் என்பதுஞ் சிங்களப் பெயர் என்கிறார்கள். இனித் திருநீலகண்ட யாழ்ப்பாணரும் சிங்களவரென்று இக்காலவாதிகள் சொல்லத் துணிவர்.

---

## சுப்பிரமணிய பரத்துவம்

உலகமனைத்திற்கும் முழுமுதற் கடவுள் யாவரோவென ஆராய் வுழி, தோற்றக் கேடுகளில்லான் எவனோ அவனே சங்கார காரணனாகிய முதற் கடவுள் என வேத சிவாகமங்களாகிய உண்மை நூல்கள் கூறு நிற்கும். அவனைப் பரன், பரசிவன் சிவம் பிரமம் என ஆன்றோர் அழைப்பர். ஆகவே சங்கார காரணராகிய சிவபெருமான் ஒருவரையே பதியெனக் கொள்வது சித்தாந்தம். அங்ஙனம் சிவபிரான் ஒருவரே பதியாகவும், ஈண்டு சுப்பிரமணியப் பெருமானைப் பரப்பிரமமெனக் கோடன் முரணாதோவெனின், அற்றன்று:- அப்பரமபதியாகிய சிவ பெருமானே தமது அருட் சத்தியாராகிய உமையம்மையாருக்கு உப தேசிக்குங் காலைத் "தாமே குகன்" எனவும், "குகன் தாமே" எனவும் கூறியருளி உண்மையைத் தெளிவித்தமையான், அன்றென்க. ஒருவனே பல வேடங்கொண்டு நடித்தாங்கு அடியார்களை யிரட்சிக்கும்பொருட்டு, குமர வடிவங்கொண்டு சுப்பிரமணியர் முதலிய பல திவ்விய நாமங்க ளோடும் நின்று விளங்குகின்றவர் சிவபரம்பொருளே என்பது தெள் ளிதிற் றுணியப்படும். இக்கருத்துப் பற்றியன்றே,

> "ஈசனேயவனுடலான்மதலையாயினன்காண்
> ஆசிலாவவனறுமுகத்துண்மையாலறிநீ
> பேசிலாங்கவன்பரனொடுபேதகனல்லன்
> தேசுலாவகன்மணியிடைக்கதிர்வருதிறம்போல்"

என்றும், "ஆதலினமது சத்தியறுமுகனவனும் யாமும் பேதகமன் றால்" எனவும், வருங் கந்தபுராணச் செய்யுட்களும் இதனை வலியுறுத் தும். சிற்சபேசனாகிய சிவபராஞ்சுடரின் திருவதனங்கள் ஐந்தும், பரை யின் திருமுகம் ஒன்றுஞ் சேர்ந்து ஆறுமுகமா யிருத்தலானும், திரி புராந்தகனது திருமுகங்கள், திருக்கண்கள் திருக்கரங்கள் என்னும் அவையனைத்தையும், ஒருங்கெண்ண முப்பதாதல்போல, செவ்வேளின் திருமுகங்கள், திருக்கண்கள், திருக்கரங்கள் என்னும் அவைகளை ஒருங்கெண்ண முப்பதாகலானும், முதற் கடவுளாகிய இறைவன் திரி புரங்களையும் திருமகள் கான் முளையின் தேகத்தையும், மந்தகாசத்தினா னும் நெற்றி நாட்டத்தானும் அட்டமையான, அறுமுகப் பெருமா னும் அசுரசேனைகளின் புரங்களைப் புன்னகையானும், திருவிழியானு மட்டமையானும், சகப்பிதாவாகிய தற்பரனுக்கு முச்சத்தியிருத்தல் சிவண, குகப்பிரமத்திற்கும் வள்ளி நாயகியாராம் இச்சாசத்தியும், தெய்வ யானை அம்மையாராங் கிரியாசத்தியும், வேற்படையாம் ஞான

சத்தியு மிருத்தலானும், திரியம்பகனுகிய சிவபெருமான் அருவம், உருவம், அருவுருவம் என்னும் முத்திறத் திருமேனிகளையுங் கோடன்மான, விசாகப் பெருமானும் அத்தகைய திருமேனிகளைக் கோடலுண்மையானும், பண்ணவிறஞ்சும் பரமபதி பஞ்ச கிருத்தியங்களையும் நடாத்துவதுபோல, குமாரக் கடவுளும் மலரோனைச் சிறை புரிந்து அக்கிருத்தியங்களை நடத்தியருளலானும், இன்னும் விரிவஞ்சி விடப்பட்ட பல ஏதுக்களானும் சிவனுஞ் செவ்வேளும் ஒருவரேயென்க. இதனை,

> "நன்முகமிருமூன் றுண்டாநமக்கவை தாமேகந்தன்
> றன்முகமாகியுற்றதாரகப்பிரமமாகி
> முன்மொழிகின் றநந்தமூவிரண்டெழுத்துமொன்று
> யுன்மகனுமத்தோராறெழுத்தெனுவுற்றவன்றே"

என்றும்,

> "முகம்விழிமலர்க்கைமூன் றுமுப்பதுமுன்புநாஞ்செய்
> மகவினைக்கருளவந்தவள்ளலுக்கீண்டுச்சாடப்
> புகுமிறைக்கவைகண்மூன் றுமுப்பதேபொலிவுமற்றே
> திருவுருவானுஞ்சேயைச்சிவனெனத்தெளிதல்வேண்டும்"

என்றுங் கூறிப்போந்த பல பிரமாணங்களாற் கண்டு தெளிக. அஃதன்றி எழுதாமறையும், அவனே மகேசுரன்; அவனே உமை; அவனே விநாயகன்; அவனே ஸ்கந்தன்; எனப் பஞ்ச ருத்திரங்களுள் ஒன்றாய அதர்வசிரசு என்னுஞ் சாகையானுஞ் சிவனே கந்தன் எனத் தெற்றெனவுணர்த்திற்று. இவ்வுண்மைகளை எட்டுணையு முணராது கந்தன் கருணாநிதியாகிய பரசிவனல்லன், அவன் பாலனே! என்று இழித்துக் கூறிய, சூரபன்மன், தாரகன், பானுகோபன், அக்கினிமுகாசுரன், வச்சிரவாகு முதலிய அசுரர்கள் தங்கள் குலத்துடன் அழிந்தொழிந்தமையும், கோழியைப் பாடுவதன்றிக் குஞ்சைப்பாடுவதில்லை யென்று இறுமாப்புற்ற பொய்யா மொழிப் புலவர் முதலாயினோர் அச்சுறுத்தப்பட்டதையும் நன்குணர்ந்தவர் செவ்வேளை சிவனென வழிபடுவர். இங்ஙனமாய வேதப்பிரமாணங்களினுனும், ஏனைய மேற் கோள்களினுலும், சுவாமி நாதனே சர்வான்மாக்களின் இருதய புண்டரீக வீடாகும் தகராலயத்தின் கண் சிதாகாயப் பொருளாயிருப்பவர் என்க. அவரே சத்திகளுக்கெல்லாந் தலைவராதலிற் சத்திமான் என்று மழைக்கப்படுவர். ஆன்மாக்களது மும்மலங்களையுங் கெடுத்து அத்துவிதப்பேற்றை அளிப்பதற்காகக் கொள்ளும் மூவகை வடிவிற்கும், ஐந்தொழிற்குங் காரணமாயுள்ளது சத்தியேயாம். அச்சத்தி, நீருக்குக் குளிர்ச்சியும், நெருப்பிற்குச் சூடும்போலக் குண குணி பாவமாக நிற்றலின் பரனேடு

பிரிவிலதாய் மரத்திற்கு வைரம் போன்றதொன்றாம். சத்தி என்பதற்கு வல்லமை யென்பதே பொருளாகும். அரசனது ஆஞ்ஞாசக்தியானது அமைச்சன் பிரதானி, சேனாதிபதி, தேசாதிபதி முதலாகக் கீழ் நின்ற சேவகன் இறுதியாகவுள்ள அங்கத்தினர் மாட்டுத் தனித்தனி பதிந்து காரிய வேறுபாட்டாற் பலவகைப் படுதல்போலப், பராசத்தியாகிய குகசத்தி ஒன்றே, இச்சித்தல், அறிதல், செய்தல் என்னும் வேறுபாட்டால் அநந்த சத்திகளாக வியாபரிக்கும் என்க. இதுபற்றியே,

“ சத்தியுருவெனலானுமத்துணைவேறிருக்கரத்திற்றாங்கலானுஞ்
சித்துருவின்றொழிலானுஞ்செவ்வேடன்வனசமலர்க்காஞ்செம்பாதம்
வித்துருமமுகத்தானுமன்னவனேசத்திமான்விளம்புமீது
சத்தியமூக்காலுமிதுசத்தியமேவேதமதுஞ்சாற்றுஞ்சாட்சி ”

என்று சித்தாந்த போதமென்னும் நூலுங் கூறுகின்றது. மலரகிதராகிய சுப்பிரமணியப் பெருமான் திருக்கரத்திற் றாங்கியிருக்கும் வேற்படைக் கலம் ஞான சத்தியென்பது, “ எம்முடைய சத்தியே நும்மைக் கொல்லும் ” என்று சிவபெருமான் சூரபன்பன் ஆதியர்க்கு வரமளித்த ஞான்று திருவாய் மலர்ந்தமையானும், அங்ஙனமே ஆணவம், மாயை, கன்மம் என்னும் மும்மலம் என்று எண்ணப்பட்ட சூரபன்மன், சிங்கமுகன், தாரகன் என்னும் மூவரையும், ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தம் என்னும் வினைப்பகுதிகளென்று எண்ணத் தகுந்த கிரவுஞ்சமலையையும் அதன் கொடிய மாயச் சேட்டைகளையும் அட்டமையானும், மற்றைய படைக்கலங்கட்கு வழங்கப்படாத “ சத்தி ” என்னுஞ் சிறப்புப் பெயரைத் தனக்கே யுடைமையானும், அறுமுகப் பெருமான் தமது திருக்கரங்களில் தாங்கியிருக்கும், தோமாம், துவசம், குலிசம், அங்குசம், அம்பு, பங்கயம், மணி, மழு, தண்டு, வாள், வில், என்னும், பதினொரு ஆயுதங்களும் பதினொரு உருத்திரர்களே என்றும், வேலாயுதம் சிவசத்தியே அவ்வுருவாக வந்திருந்ததென்றும் கந்தபுராணம் உரைத்தலானும், பிறவாற்றானுந் தெற்றென வுணரப்படும். இத்துணைச் சிறப்பெய்தியதாகிய பராசத்தி என்னும் ஆஞ்ஞாசக்தியைக் கொண்டு ஆன்மாக்களின் பாசபந்தங்களை அறுத்துத் தமது திருவடிப்பேற்றை அளித்தருளுவர்.

இங்ஙனமாய சண்முகநாதனது அநந்த கல்யாண குணங்களையுணராத மந்தமதியுடையார் சிலர், நங்குருநாதனைச் சிவனுக்கு வேறாக வைத்து, அவரின் கீழ் நிலையிலுள்ளாரென எண்ணி இடர்ப்படுவர். தமிழ்ப்பண்டை நூல்கண் மாட்டும் கந்தனே கடவுளாக அறையப்பட்டுள்ளது. குறிஞ்சி நிலத்துக்குத் தெய்வம் குக்குடத் துவசனே என்று

அகத்தியம் தொல்காப்பியம் முதலிய நூல்கள் கூறுமாற்றால், தமிழ் நாட்டுத் தெய்வம் சரவணபவனே என்பது தேற்றம். உத்தரத்தின்கண் சுப்பிரமணிய தலங்கண் மல்குறுது, தக்கிணத்தின் கண் மிகுந்து காணப்படுவதுமிதனை வலியுறுத்தும். இத்தகைய சிறப்பு வாய்ந்த பரமாசாரியராகும் குமாரக் கடவுள் கலியுகத்திலே விசேட பிரத்தியட்ச தெய்வமாக இருந்து அன்பருக்கருள் புரிதலாற் "கலியுகவரதர்" எனவுங் காரணப்பெயருற்றார். தமிழ் நாட்டகத்தார் இந்நாள்காறும் தங்குல தெய்வமாக அவரையே தொழலும், அவர் புகழ்பேசலும், கேட்டலுஞ் செய்துய்கின்றார்கள். ஆகலின் பாவயுகமாகிய இக்கலியுகத்திலே இருமை இன்பமும் எளிதிற் பெறவேண்டியோர் வேண்டுவார் வேண்டுவ வெல்லாம் வரையாதீயுங் கலியுகவரதரை அனவரதமும் திரிகரணங்களாலுந் தொழுதுய்யக் கடவர்கள்.

க. வைத்தியலிங்கம் பிள்ளை,
வண்ணைநகர்.

---

## மார்கழிப் பிள்ளையார்

"இந்துசாதனம்"

மனுட வருடமொன்று தேவர்கட்கு ஒரு நாளாகும். அத்தேவநாள் உத்தராயணந் தட்சிணாயனம் என விரண்டாகப் பகுக்கப்படும். தை மாசம் முதல் ஆனி மாசம் வரையிலுள்ள காலம் உத்தராயணமென்றும், ஆடி மாசம் முதல் மார்கழி மாசம் வரையிலுள்ள காலம் தெட்சிணாயனமென்றுஞ் சொல்லப்படும். தேவர்கட்கு உத்தராயணம் பகலும், தெட்சிணாயனம் இரவுமாகும். மனுஷ மாசமொன்று தேவர்கட்கு ஐந்து நாழிகையாகும். இராக்காலத்தின் கடைசி முகூர்த்தம் விடியற்காலமாயவாறு, சூரியன் தனுராசியிற் சஞ்சரிக்குங் காலமாகிய மார்கழி மாசம் தேவர்கட்குப் பிராமிய முகூர்த்தமாகும். [மார்கழி மாசம் வடமொழியில் "மார்க்கசீர்ஷ" என்று வழங்கும். இது மிர்கசீர்ஷ என்னும் பதத்தின் திரிபு போலும். இம்மாச பூர்ணை தினத்தில் சந்திரன் மிருகசீரிட நட்சத்திரத்திலிருக்கும். இதனாலேயே இம்மாசம் வடமொழியில் "மார்க்கசீர்ஷ" என்று சொல்லப்படுமென்பர். இம்மொழியின் திரிபாகவே தமிழில் மார்கழி மாசமென்றாயிற்றெனலாம்.]

தேவர்கள் பிராமிய புண்ணியகாலமாகிய மார்கழி மாசத்திலே தத்தம் நித்தியகன்மங்கள் முடித்து ஈஸ்வரனைப் பூசிப்பர். மனுஷர்களும் இம்மாசம் முழுவதும் தமக்குரிய புலரிக்காலத்தில் நித்தியகடன் முடித்

துக் கடவுளை விசேடமாகப் பூசித்தல் வேண்டுமென்பது பெரியார் கொள்கை.

மார்கழி மாசம் முழுவதும் மாதரும் ஆடவரும் விடிய ஐந்து நாழிகைக்கு முன்னர் எழுந்து நித்தியகடன் முடித்து தத்தமில்லங் களைச் சுத்திசெய்து வீட்டின் முற்றத்தில் ஓரிடத்தைக் கோமயத்தினுல் மெழுகி பச்சரிசி மாவினுற் கோலமிட்டு கோமயத்தினுற் பிள்ளையார் பிடித்து வைத்துப் புஷ்பங்கள் சாத்தி "விக்கினேஸ்வரக் கடவுளே! எங்கள் இல்லங்களில் அசுரசத்தி பூதபைசாசங்களால் விக்கினம் நேராவண்ணங் காத்தருளவேண்டு" மெனப் பிரார்த்தித்தல் முறை யாகும். அவமிருத்துகளினுலும் வேறு ஏதுக்களினாலு மிறந்து மலின மடைந்திருக்கும் பைசாசங்கள் தங்களுக்குத் தொடர்புடையார் வசிக் குங் கிருகங்களிற் செல்லும்போது பிள்ளையாரின் காவலினுல் உட்புக முடியாது எறும்பாகவும் பிறஊர்வனவாகவும் கோலமிட்ட அரிசி மாவை யுண்டு மீளுகின்றனவென்னுங் கொள்கை யிருப்பதனுலேயே பச்சரிசி மாவினுற் கோலமிட வேண்டுமென்பர். செங்கற்கட்டிகள் நீறு முத லியவற்றினுற் கோலமிடுதலால் பைசாசசாபமுண்டென்றும், தரித்திர மதிகரிக்குமென்றும் பெரியோர் கூறுகின்றனர். மார்கழி மாச முதற் றினத்தில் ஒரு பிள்ளையாரும் இரண்டாந்தினத்தில் இரண்டு பிள்ளை யாருமாக இப்படியே தினந்தினம் ஒவ்வொன்றைக் கூட்டிப் பிள்ளையார் பிடித்து வைக்கும் வழக்கமுண்டு.

இங்ஙனம் மார்கழி மாசம் முழுவதும் வைத்துப் பூசித்த கணபதி மூர்த்தங்களை மகரசங்கிராந்திக்குப் பின் ஒரு தினத்தில் ஒருங்கு வைத்து மோதகம் முதலாம் விசேட நைவேத்தியம் வைத்துப் பூசித்து, அதற்கெனக் கட்டப்பட்ட தேரில் வைத்து வாத்தியகோஷத்துடன் கொடுபோய், சமுத்திரத்திலேனும், ஆற்றிலேனும், குளத்திலேனும், சுத்த நீர்நிலையிலேனும் விடல்வேண்டும்.

நம்மவருட் சிலர் இக்காலத்தில் நவீன நாகரிகந் தலைப்பட்டமை யால் இவற்றின் உண்மையை உணராது இவற்றை யலட்சியம் செய்கின் றனர். மார்கழிப் பிள்ளையார் பிடித்து வைக்குங் கருமம் பெரும்பா லும் மாதர்கள் கடமையே யாதலால் ஆடவர்களாயுள்ளவர்கள் அதனை யலட்சியஞ் செய்யினும் நமது பெண்மணிகள் இன்னோரன்ன பழக்க வழக்கங்களைக் கைவிடாது செய்து வரல்வேண்டும். மார்கழிப்பிள்ளை யார் பிடித்து வைத்துப் பூசிப்பதால் பிணி வறுமை என்னுமிவற்றின் நீக்கமும் செல்வ விருத்தியும் மற்றும் பேறுகளும் உண்டாதல் பிரத்தி யக்ஷம்.

## இரக்ஷணிய சேனையின் அக்கிரமங்கள்

பாதிரிமார் நமது தேசத்தில் நுழைந்து நியாயம் காட்டாமல் அனேக லக்ஷம் ஜனங்களை அநீதமாய்க் கிறிஸ்தவராக்கின விஷயம் யாவரும் அறிந்ததே. இப்போதும் அவ்விதமான அக்கிரமம் செய்வதில் சற்றும் பின்னிடுகின்றார்களில்லை. இவர்கள் ஒருபக்க மிப்படிச் செய்ய இரக்ஷண்ணிய சேனை (Salvation Army) என்னும் மற்றொரு வகுப்பார், சில வருஷங்களாக வந்து செய்யும் அக்கிரமங்களின்னும் மிகப் பெரிதாகவே யிருக்கின்றன. இவர்கள் ஐரோப்பியராயிருந்தும் தங்கள் தேசாசாரத்தையும் மதாசாரத்தையும் விட்டு, நம்மைப்போலக் குடுமி வைத்தும், காவி வேஷ்டி தரித்தும், நெற்றியில் விபூதி சந்தனப்பொட்டு, சாந்துப்பொட்டு, குங்குமப் பொட்டு முதலியன வைத்தும், காலில் செருப்பு போட்டும், மார்பில் பூணூல் தரித்தும், யௌவன ஸ்திரீகள் நமது ஸ்திரீகளைப்போல் அலங்காரஞ் செய்து கொண்டும் சென்னை, தஞ்சாவூர், கோயமுத்தூர், ஈரோட்டு, திருச்சினாப்பள்ளி, வங்காளம் முதலிய பல இடங்களில் நமது மதத்தைத் தூஷித்தும், தங்கள் மதத்திற்கு நியாயங்காட்டாமல் கிறிஸ்துவை நம்பினால் மோக்ஷங் கிடைக்குமென்று வாயினால் சொல்லியும் பிரசங்கம் செய்து, தாய் தந்தைகள் வயிறெரிய நமது மக்களைக் கிறிஸ்தவராக்கி வருகின்றார்கள். அலங்காரத்தோடுங்கூடிய வாலிபப் பெண்கள் பைபிலுக்கே விரோதமாகப் புருஷர்கள் சபையில் பிரசங்கிப்பதும், அந்நிய புருஷர்களிடத்தில் கூச்சமின்றிச் சென்று புத்தகம் விற்பதும், அவர்களைக் கிறிஸ்து மதத்தில் சேர அழைப்பதுமான காரியங்கள் செய்கின்றார்கள். இந்துக்கள் வேஷந்தரித்த இந்த வெள்ளைக்காரர்கள் வெளிகளில் இந்துக்கள் வீடுகளில் சென்று பிச்சைவாங்கிச் சாப்பிடுவதோடு பணமும் வாங்குகின்றார்கள். கோவில்களிலும் நுழைகின்றார்களாம். இவர்களை வடதேசத்து இந்துக்களென்று கருதி அனேக இந்து வைதிக மதஸ்தர்கள் ஏமாந்து போகின்றார்கள். இந்துக்களே! எப்படியானாலும் நம்மைக் கெடுக்கவே வந்திருக்கிறார்களானமையால், அவர்களை இந்துக்களென்று நம்பி மோசம் போகாதீர்கள்; யௌவனப் பெண்கள் பிரசங்க முதலியன செய்கின்றார்களென்று அங்கு செல்லாதீர்கள்; அவர்களை நமது மதப் பகையாளி யென்றெண்ணுங்கள்; அவர்கள் ஏதோ நமக்கு நன்மை செய்ய வந்ததாக நினைக்கவேண்டாம். கட்டுக்கதையான பைபிலை நம்ப மாத்திரம் சொல்வார்களேயன்றி மற்றொன்றுஞ் சொல்லமாட்டார்கள். தர்க்க சாஸ்திரப்படிப் பேச

மாட்டாத அந்த மூடர்களுடைய வார்த்தைக்குச் செவி கொடுப்பதும், அவர்களுடைய முகாலோபனஞ் செய்வதும் சுருதி யுக்தி அனுபவத்துக்கிணங்கிய வேத சாஸ்திரங்களைப் பிரமாணமாகக்கொண்ட இந்துக்களுக்கு மிக அவமானமாகும். ஜீவாத்துமா, பரமாத்துமா, உலகம் இம்மூன்றுக்கும் இலக்கணம் உள்ளது உள்ளபடியே சொல்லும் நமது இந்து சமயத்தைவிட்டு, யாதொரு நியாயமுமில்லாமல் வாய் வார்த்தையாக நம்பச்சொல்லும் கிறிஸ்து மதப் பாழுங்கும்பியில் விழுவது மிக்க அறிவீனமென்றெண்ணுங்கள். அவர்கள் ஜீவனத்துக்காகக் கத்துகின்றார்கள்; அவர்களுக்கு அதுவே தொழில். கிறிஸ்து மதம் பொய் யென்று தெரிந்து கொண்டாலும் பொய்யென்று தங்கள் வாயினால் சொல்லவே மாட்டார்கள்; சொன்னால் அன்றே ஜீவனம் போய்விடும். அவர்கள் சீவனத்தின் பொருட்டு நல்லதோ கெட்டதோ ஆரம்பித்ததை விடக்கூடாதென்னும் பிடிவாதத்தைப்பற்றிக் கிறிஸ்தவராக்க முயன்றால், நாம் புத்தி கெட்டு அதில் சேரலாமோ? அற்ப போகத்துக்கு இச்சைகொண்டு நிராநரகத்துக்கு இரையாவதும், என்றும் ஒரு தன்மையதாய் விளங்கும் பரப்ரம்மத்தின் நிரதிசயானந்த வாழ்வை யிழந்துவிடுவதும் படித்த புத்திமான்களுக்கு அழகாமா? சிருஷ்டி, திதி, சங்கார கர்த்தர்களுக்கு அதிகமும், நித்திய, நிர்ம்மல, நிர்ச்சல, நிர்விகார, நிர்விகற்ப, நிராதார, நிர்விஷயமுமான பரமேஸ்வரனை உண்மை, பொறுமை, அடக்கம், தயை, சாந்தம், சிவகாருணியம் முதலிய சற்குணங்களைப் பெற்று மனம் பரிசுத்தமாய் வைராக்கியத்தோடு உள்ளும்புறமும் தியானித்து, அவருடைய திருவருட் பிரசாதத்தைப் பெற்று நற்கதியடைவது நமது இந்து மதத்தைத் தவிர வேறு மதத்திலில்லாமையாலும், இதர மதங்கள் இதற்குச் சாதகமாக நிற்குமன்றி உண்மையான முத்தியைத் தராமையாலும், அதிலும் கிறிஸ்து மதமென்பது சில கற்பனை கதைகளை யுரைக்கின்றதன்றி அது ஓர் மதமல்லவாகையாலும் நமது இந்து சமயப் புத்திமான்கள் நமது மத சாஸ்திரங்களைக் கற்று அதன் வழி நின்று சன்மார்க்கமுத்தி நெறியைப் பெறுவார்களாக. அன்றித் தற்காலத்தில் நம்மை வந்து சூழ்ந்திருக்கும் கிறிஸ்து மதத் திமிரத்தை இந்துமத ஞானபாஸ்கரனால் ஓட்ட ஒவ்வொரு மதாபிமானிகளும் இதுவே வேலையாகக் கங்கணங் கட்டிக்கொள்வது அத்தியாவசியகமாம். கிறிஸ்து மதம் விருத்தியாவதால் நமது தேசலாபம் போய் விடுவதுமன்றி, ஆத்துமலாபத்தையும் இழப்போமென்பதற்கு அணுத்துணையும் சந்தேகமில்லை.

மதாபிமானிகளே! எந்தவூரிலும் சபைகளேற்படுத்துங்கள்; மத விஷயமான பிரசங்கம் செய்யுங்கள்; மத சாஸ்திரங்களைப் பூர்வபக்ஷ சித்தாந்தத்தோடு படியுங்கள்; பைபிலிலுள்ள குற்றங்களை ஜனங்களுக்கு நியாயவாயிலாக அறிவியுங்கள்; இவ்விஷயத்திற்குச் சிறிதும் அஞ்சாதீர்கள்; வேதத்தைப் பிரமாணமாகக்கொண்ட ஒவ்வொரு இந்துவும் ஐக்கியமாய்ச் சகோதர வாஞ்சையைப் பெறுங்கள்; எங்கும் ஸ்கூல்களை ஸ்தாபித்தும் பொதுப் பாடங்களுடனே மதபாடமும் வையுங்கள்; மதாபிவிர்த்தியின் பொருட்டு உலோபத்துவமின்றிப் பொருளுதவி செய்யுங்கள்; மதாபி விர்த்திக்காக நமது முன்னோரால் வைக்கப்பட்ட திரவியத்தை மடாதிபதிக ளதன்பொருட்டுச் செலவழிக்க அவர்களுக்கு அடிக்கடி யாவரும் ஒன்று கூடி மனுபண்ணுங்கள். கிறிஸ்தவர் பிரசங்கத்தைக் கேளாதீர்கள்; அவர்கள் ஸ்கூல்களுக்குப் பிள்ளைகளை அனுப்பாதீர்கள்; அனுப்ப நேர்ந்தாலும் சுய மத சித்தாந்தங்களையும் கிறிஸ்துமதக் குற்றங்களையும் எடுத்துக் காண்பியுங்கள்; மத விஷயமான பத்திரிகைகளை எங்கும் பிரசுரம் செய்யுங்கள், வலிய வந்து நமது மதத்தை யிகழும் கிறிஸ்துமத போதகரைக் கண்ட கண்டவிடங்களில் நியாயத்தால் கண்டியுங்கள்; அந்தந்தப்பட்டினங்களிலுள்ள மதாபிமானிகள் கிராமங்கள்தோறும் பிரசங்கிகளை யனுப்பிக் கிறிஸ்து மத வழுக்களையும் இந்து மத மேன்மையையும் காட்டிப் பிரசங்கம் செய்யப் பண்ணுங்கள்; மத்தியஸ்தர்கள் முன்னிலையில் கிறிஸ்துவர்களோடு தர்க்கஞ்செய்து ஜெயமடையுங்கள்; பல பல வார்த்தைகள் சொல்வதில் பயனில்லை; எந்த இந்துமதஸ்தரும் கிறிஸ்துமதத்தில் செல்லாதிருக்க எந்தெந்தவிதமாய் முயலவேண்டுமோ, அந்தந்த விதமா யெல்லாம் வஞ்சகமில்லாமல் முயலுங்கள்; அன்றிச் சுதேச கிறிஸ்துமத சகோதரர்க்குக் கிறிஸ்துமதத் தாழ்மையையும் இந்து மதத்திலுள்ள மேன்மையையும் காட்டி, இந்துமதத்தை அநுசரிக்கச் செய்யுங்கள். இவ்வாறு விடாமல் செய்வோமானால் கிறிஸ்துமதம் தூசாய்ப் பறந்து போய் விடுமென்பதிலையமில்லை. இரக்ஷணிய சேனை என்னும் கூட்டம் இத்தேசத்திற்கு வந்து இந்துக்களை ஏமாற்றிக் கிறிஸ்தவராக்குவதற்குக் காரணம் நமக்கு மதாபிமானமும் ஒற்றுமையுமில்லாமையுமே; அன்றி ஷெ விஷயத்தைப்பற்றிக் கவலைபெடுத்துக் கொள்ளாமையுமேயாம். இனி கிறிஸ்தவர் மாயவலையில் நமது மக்கள் சிக்காதிருக்கச் சர்வேஸ்வரன் கிருபை புரிவாராக.

(இந்து ட்ராக்ட் சொஸைட்டி).

---

# வேதம்

ஆத்துமாக்களுக்கு முன்பு இகபரசுகத்தைத் தந்து, பின்பு ஜனன மரண துக்கத்தில் நின்றும் விடுவித்துப் பரமுத்தியைத்தரும் சாஸ்திரங்களெல்லாவற்றுள்ளும் முதன்மை பெற்றது வேதம். வேதம் என்னும் சொல் வித் என்னும் தாதுவினின்றும் தோன்றியது. அதன் பதப்பொருள் அறிதற் கருவியாம். அவ்வேதம் அஞ்ஞானமென்னும் பேரிருளில் அழுந்திக் கிடக்கும் ஆன்மகோடிகள் அவ்வஞ்ஞானத்தினின்றும் நீங்கிப் பேரறிவு பெற்று உஜ்ஜீவிக்கும்படி, பரமகருணாநிதியாகிய பரமேஸ்வரனால் அநாதியே அருளிச் செய்யப்பட்டது.

அது இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என நான்காகும். அவற்றுள் இருக்குவேதம் இருபத்தொரு சாகையும், யசுர்வேதம் நூற்றொரு சாகையும், சாமவேதம் ஆயிரம் சாகையும், அதர்வணவேதம் ஒன்பது சாகையும் உடையன. இவை நான்கும் கர்மாநுஷ்டானங்களையும், ஆத்தியான்மீக ஞானத்தையும் எடுத்துக் கூறும்.

ருக் என்றால் மந்திரம்; யசுர் என்றால் கட்டளை; சாமம் என்றால் ஸ்துதி; அதர்வணம் என்றால் எங்கும் கலந்தது. அதாவது மேற்படி மூன்று வேதங்களிலும் கலந்திருப்பதாம்.

வேதமானது; சீக்ஷை, வியாகரணம், நிருத்தம், சந்தஸ், சோதிடம், கற்பம் என ஆறு அங்கங்களையுடையது. சீக்ஷையாவது வேதத்தின் ஸ்வரங்களையும் உச்சாரண லக்ஷணத்தையும் சொல்வது; வியாகரணமாவது வேதத்தின் பதலக்ஷணத்தைச் சொல்வது; நிருத்தமாவது வேதத்தின் பதங்களுக்கு விவரணம் கூறுவது; சந்தஸ்ஸாவது வேதத்தின் பலதுறைப்பட்ட வாக்கியங்களுக்கு 'இன்ன இன்னது இத்தனை இத்தனை எழுத்துடையன' என அக்ஷரவரையறை கூறுவது. சோதிடமாவது வேதத்தில் சொல்லப்பட்ட வைதிக கருமங்களைச் செய்யவேண்டிய காலத்தைச் சொல்வது; கற்பமாவது வைதிக கருமங்களைப் பிரயோகஞ் செய்யும் முறையைக் கூறுவது. இவை ஆறும் வேதங்களை ஓதுதற்கும், அவற்றின் பொருளை உணர்வதற்கும், உணர்ந்தவாறு ஒழுகுவதற்கும் அத்தியாவசியமாக முன்பு கற்கவேண்டிய சாஸ்திரங்களாம்; அல்லாமல் அவ்வேதம் எந்நாளும் ஓர் எள்ளளவேனும் மாறாமலும், மாற்றப்படாமலும் நிலைபெறும்படி (அரசர்க்கு மெய்காப்பாளர் போல) காத்து நிற்பனவாம்.

வேதமானது; கன்மகாண்டம், ஞானகாண்டம் என இருபகுப்புடையது. மற்றொரு வழியில் மந்திரம், அர்த்தவாதம், விதி என

மூன்று வேற்றுமைகளைப் பெற்றுள்ளது. அவற்றுள் கர்மகாண்டத்தில் யாக முதலிய தருமங்கள் கூறப்பட்டன; ஞானகாண்டத்தில் ஜீவாத்துமாவானது பரமாத்துமாவை அடையும் வழி, உபாசனையாகிய இவற்றைக் கூறுகின்றது. மந்திரமாவது அவரவர் அநுஷ்டிக்கவேண்டிய கர்மங்களை விரித்துக் காட்டுவது; அர்த்தவாதமாவது கேட்பவர்களுக்கு எளிதில் விருப்பமுண்டாகத் துதிரூபமாகச் சொல்லி, அக்கருமங்களைச் செய்து சுகம்பெறத் துணைக்கருவியாய் நிற்பது; விதியோ காட்சி முதலிய பிரமாணங்களால் அறிதற்கருமையான பரம்பொருளை உணர்த்துவது

வேதத்தில் சிருஷ்டிக்கிரமம், தெய்வலக்ஷணம், ஆன்மலக்ஷணம், மனமுதலிய அந்தக்கரணலக்ஷணம், பந்தலக்ஷணம், விடுதி லக்ஷணம், யோகமுறை, ஞானமுறை முதலியன வெல்லாம் தத்துவ சாஸ்திரங்களுக்கும், தர்க்கசாஸ்திரத்துக்கும் மாறுபடாமல் உள்ளங்கை நெல்லிக்கனிபோலக் கூறப்பட்டுள்ளன.

வேதத்திற்குத் துணையாக ஆகமங்களும், ஸ்மிருதிகளும், புராணங்களும், இதிகாசங்களும் இருக்கின்றன. வேதத்திலுள்ள ஒரு வாக்கியத்தில் ஒரு எழுத்துக் குறைந்தாலும், அதிகப்பட்டாலும், மாற்றப்பட்டாலும் அவ்வாக்கியம் சுரத்தோடு ஒத்து ஓதுதற்கு இசையாது; அது மாத்திரமா? பொருளும் கெட்டு மற்றைய நூல்களோடு மாறு கொள்ளும்; அது மாத்திரமா? வியாகரணத்துக்குப் பகையாகும்; அது மாத்திரமா? சந்தசு என்னும் எழுத்துக் கணிதநூலுக்கு விரோதப்படும்; அது மாத்திரமா? நியாய சாஸ்திரத்திற்கு அசம்மதமாகும்.

வேதமானது ஆத்துமாக்களுடைய கர்ம பரிபாகத்தையும், புத்தி தாரதம்மியத்தையும், சரீர பலாபலத்தையும், காலதேச வேறுபாடுகளையும் அநுசரித்து, அனேகப் பிரகாரங்களாக முத்தி அடையும் வழிபாடுகள் சொல்லுகின்றது. ஆகையால் அவரவர் தகுதிக்கேற்றபடி ஒழுகலாம்.

வேதம் வெகு விரிவாயிருப்பதால் வேதவியாசர் அதை நாலுபாகமாக்கி ஒவ்வொரு வேதத்தையும் ஒவ்வொரு இனத்தார் முன்னதாகக் கற்க விதித்தனர். அவ்வாறே கற்று வருகின்றமையால் அது காரணமாகச் சிலர் ருக்குவேதிகளென்றும், சிலர் யசுர்வேதிகளென்றும், சிலர் சாமவேதிகளென்றும், சிலர் அதர்வணவேதிகளென்றும் அந்தணர்களில் சொல்லப்படுகின்றார்கள். இதனால் மற்ற வேதங்களைக் கற்கப்படாதென்பதல்ல; தங்களுக்குரிய வேதத்தை முன்பு கற்கவேண்டுமென்பது

கருத்து. அதர்வணவேதிகள் வடதேசத்தி லிருக்கின்றார்கள். ஸ்ரீமாத வாசாரியர் முதலானோர் வேதத்திற்கு உரை செய்திருக்கின்றார்கள்.

வேதத்தின் பிற்பாகமாகிய ஞானகாண்டமென்னும் உபநிடதங்கள் (10) தசோபநிடதங்களெனவும, (32) துவாத்திரிம்சத் உபநிடதங்க ளெனவும், (108) அஷ்டோத்திரசதோபநிடதங்களெனவும் பலவாயிருக் கின்றன. அவற்றுள் தசோபநிடதங்களுக்குச் சர்வாசாரியர்களும் பாஷி யஞ் செய்திருக்கின்றார்கள். அந்தத் தசோபநிஷத்துக்களாவன:— ஈசம், கேனம், கடம், பிரஸ்னம், முண்டகம், மாண்டுக்கியம், தைத்திரீ யம், சாந்தோக்கியம், பிரகதாரண்ணியம், ஐதரேயகங்களாம். இவ்வுப நிடதங்களில் ஜீவேஸ்வர சகங்களைப்பற்றியும், மோக்ஷம் அடையு மார்க் கத்தைப்பற்றியும் சாங்கோபாங்கமாகச் சொல்லியிருக்கின்றன.

வேதம் என்னும் பெயர் ஆரியர்களான நமது மூலசாஸ்திரத் திற்கே உரியது. மற்றவர்கள் தங்கள் மதத்திற்குச் சிறப்பாயிருக்கு மென்று கருதி இத்தேசத்திற்கு வந்த பிறகு வைத்துக்கொண்டார்கள். மற்றவர்களுடைய மூலமான மதக்கிரந்தங்கள் வேறு பாஷையிலிருக் கின்றன. அப்பாஷைகளில் வேதம் என்னும் சொல் கிடையாது. வேதம் என்னும் சொல் சமஸ்கிருதபாஷை யானமையால் சமஸ்கிருத பாஷையிலுள்ள நமது ஆரியமதமூலக் கிரந்தத்திற்கே பொருந்துமென் பதாம். இன்னும் எவ்வளவோ வேதத்தைப்பற்றிச் சொல்ல வேண்டி யிருக்கின்றது. இடமில்லாமையால் வெகு சுருக்கமா யெழுதலாயிற்று. இவ்வளவு சிறப்புள்ள வேதத்தையும், அதனோடு ஒற்றுமையுள்ள சாஸ் திரங்களையும் அநுசரித்து, அவற்றிற் கூறியபடி யொழுகி, ஞானகாச சொரூபியான பரப்ரம்மத்தை அனுதினமும் பணிந்து, மாயாபாசத்தை யொழித்துப் பரகதி அடைவோமாக.

(இந்து ட்ராக்ட் சொஸைட்டி.)

## தீர்த்த யாத்திரை

### இந்துசாதனம்

சிவபெருமான் ஆன்மாக்கள் பொருட்டு மூர்த்தி தலம் தீர்த்தம் என்னும் மூன்றுமாய் விளங்குவர். சிலவிடங்களில் தீர்த்தமும், சில விடங்களில் மூர்த்தியும், சில விடங்களில் தலமும் சிறப்புடையனவா யிருக்கின்றன. இவை மூன்று மமைந்து சிறந்த இடங்களுமுண்டு. தீர்த்தம் சிவபெருமானின் திருவருள் மயமாகக் கருதப்படுகின்றது. அதிலே விதிப்படி ஸ்நானஞ் செய்வோர் பாபங்களினின்றும் நீங்குகின் றார்கள். கங்கை யமுனை, சரஸ்வதி, சிந்து, காவேரி முதலான இவை கள் புண்ணிய தீர்த்தங்களென்று சொல்லப்படுகின்றன. இவைகளன்

றிச் சேது முதலிய வேறு தீர்த்தங்களுமுள. புண்ணிய தீர்த்தங்களிலே விரும்பி யாடினோர் பூமியிலே பறவை விலங்கு முதலிய ஈழான யோனிகளிற் பிறவாமற் சுவர்க்கம் முதலிய உலகங்களில் தேவர்களாய்ப் பிறப்பார்கள். தீர்த்த யாத்திரை செய்ய விரும்பினோர், யாத்திரைக்குப் போகுமுன் ஒருநாள் உணவின்றி உபவாசமிருந்து விநாயகக் கடவுளை வழிபட்டு, அடுத்த நாள் பாரணஞ் செய்து பின்பு புறப்பட்டுப் போதல்வேண்டும். தாம் குறித்த தீர்த்தத்தை அடைந்து விதிப்படி தீர்த்தமாடிப் பசு, பொன் முதலாகிய தானங்களைச் சற்பாத்திரராயுள்ள அந்தணர்களுக்குக் கொடுத்து அதன் பின் அன்னதானம் முதலியவைகளுஞ் செய்து பின் தென்புலத்தவர்களுடைய கடன் செய்தல் வேண்டும். தீர்த்தக்கரையை யடைந்து அன்றே உணவு முதலியவற்றை ஒழித்துத் தலைமயிரைக் குறைத்துத் தீர்த்தமாடுதல் வேண்டும். அப்படிச் செய்வோர் பாவத்தினின்றும் நீங்குவர். இவ்வித முறையில்லாது தீர்த்தமாடுவோர் பாவத்தினின்றும் நீங்கமாட்டார். தீர்த்தமாடச் செல்வோர் மனதிலே ஒருவித அழுக்குமில்லாதவராய்ச் சத்தியமுந் தானமும் இன்சொல்லும் மன அடக்கமு முடையவராய்த் தன்னுயிர்போலப் பிற உயிர்களுக்கு அன்பு புரிபவராயிருத்தல் வேண்டும். இவைகளை யுடையராய்த் தீர்த்தமாடுவோர் மானன தீர்த்தமுடைய ரெனப்படுவர். மானன தீர்த்தமாகிய அகத்தீர்த்தத்திலாடாதார் புறத்தேயுள்ள தீர்த்தங்களில் எவ்வளவு காலமாடினும் புறத்தழுக்கைப் போக்கிக் கொள்வதல்லாது புனிதராக மாட்டார். அவர்கள், தீர்த்தங்களுள்ளே பல கோடி காலங் கிடந்து பவங்களினின்றும் நீங்கி முத்தியடையாதனவாயிருக்கும் முதலை, சுறு முதலிய மற்சங்களை ஒப்பர். மனத்திலே அழுக்காறு முதலிய குற்றங்களில்லாதவர்கட்கே கல்வியுந், தானமும், கடவுட் பூசையுந் தீர்த்தமும், மற்றுமுள்ள அறங்களும் அதிக பலனைக் கொடுக்கும். ஒவ்வோர் தீர்த்தத்தின் மகத்துவங்களும் அவ்வவ் ஸ்தலங்களைக் கூறும் புராணங்களில் விளங்காநிற்கின்றன. ஆகவே "மூர்த்தி தலந்தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு, வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே" என்று தாயுமான சுவாமிகளு மருளியிருக்கின்றனர். தீர்த்த யாத்திரை செய்து நாம் நமது இல்லத்தை அடைந்த தினத்திலே விசேடமாக மாகேசுர பூசை செய்து சிவனடியார்களுக்கு உவகையோடும் அன்னங்கொடுத்தல் வேண்டும். ஆகையால் நாம் எல்லோரும் முறைபே தீர்த்த யாத்திரைகள் செய்து நமது வினைகளைக் களைவோமாக.

க. சரவணமுத்து, நவாலி வடக்கு.

---

## வட திருமுல்லைவாயில் வசந்த மகோற்சவம்

"சொல்லரும் புகழான் றொண்டைமான் களிற்றைச்
சூழ்கொடி முல்லையாற் கட்டிட்
டெல்லையி லின்ப மவன்பெற வெளிப்பட்டருளிய
இறைவனே யென்று

நல்லவர் பரவுந் திருமுல்லை வாயிலுறைதனே
நரைவிடை யேறீ
பல்கலைப் பொருளே படுதுயர் களையாய்
பாசுபதா பரஞ் சுடரே."

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தினரால் நிகழும் ருத்திரோத்காரி௵ வைகாசிமீ 14௳ (27.5-23) ஆதிவாரம், வடதிருமுல்லைவாயிலில், கொடியிடையம்மை பங்கரும், பாசுபதா பரஞ்சுடருமாகிய மாசிலாமணீசுவரருக்கு, காலையில் உருத்திராபிடேகாதி யுபசாரங்களும், இரவில் வசந்த மகோற்சவமும், இடையில் உழவாரத் திருப்பணி, தமிழ் வேதபாராயணம், சைவப்பிரசங்கம், மாகேசுர பூசை முதலியனவும் நடத்தப்படும். சிவனடியார்களியாவரும் வந்து குழாம் புகுந்து ஈசர்க் காட்செய் தின்புறுக.

---

## சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் 24-வது வருடப்பூர்த்தி மகோற்சவம்

இம்மகோற்சவம் இதின் சபாமண்டபத்தில் நிகழும் 1923௵ மேமீ 13௳ ஆதிவாரம் பகல் 3½-மணி தொடங்கி நடைபெறும். திருக்கூட்டத்தினர் யாவரும் தங்கள் இஷ்டர்களுடன் வந்து கௌரவிக்கப் பிரார்த்திக்கின்றோம்.

**அப்போது நடைபெறுவன :—**

(1) தேவார பாராயணம். (2) 24-வது வருடச் சபாக்கிரந்த அரங்கேற்றம். (3) "Rao Bahadur S. இரத்தினவேல் செட்டியார் சைவ பாடசாலை"ப்பிள்ளைகளுக்குப் பரிசளித்தல். (4) அத்தியட்சர்கள் நியமனம். (5) சைவ மகோபந்நியாசம்.

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்,
1—4—23.

இ. ஆதிமூல முதலியார்,
காரியதரிசி.

---

## 100 ரூபா நன்கொடை

சென்னை பெரியண்ண முதலி வீதி 36-வது இலக்க வீட்டிலிருக்கும் ஸ்ரீமான் வி. முத்தையா பிள்ளையவர்கள் பல வருடங்களாக இத்திருக்கூட்டத்துளிருந்து மாதந்தோறும் தவறாமல் ஒரு ரூபா சந்தா உபகரித்து வருகின்றார்கள். இவர்கள் இத்திருக்கூட்டத்தார் செய்துவரும் சைவ சமய பரிபாலனத்தைப் பல நாட்களாக நன்குணர்ந்தவர்கள். இவர்கள் தம்மை ஒருவரும் அடுத்துக் கேளா முன்னரே, தாமே இம்மாதம் நூறு ரூபா நன்கொடையளித்துத் "தண்டாமலீவது தாளாண்மை" என்றபடி தமது தாளாண்மையையும் சைவ சமயப்பற்றையும் விளக்கினார்கள். இவர்களுக்குப் பல கோடிவந்தனம்.

எட்டாவது மலர் இறைவனருளால் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

# பித்தவாயு லேக்கியம்

நெய் முதலிய பொருள்களின் ...லையேற்றத்தையும் இதைச்
சித்தப்படுத்துவதனால் நேரிடும் ...திக ...யாசையையும் நோக்கி
இடையில் சிலகாலமாக இந்த லே...ிய விற்பனை நிறுத்தி வைக்கப்
பட்டது. இதனையுண்டு குணமடை... பெற்றவர்கள் ...லர் அடிக்
கடி வேண்டிக் கொள்வதனால் இது ...
சித்தம் செய்யப்பட்டிருக்கிறது. இ...படியும் வி...பனைக்குச்
பவர்களுக்குப் பித்தவாயுவால் உண்... உபயோ...த்து வரு
நோய்களும் அணுகா. ஜீரணசக்தி உ...ும் எவ்வகைப்பட்ட
பலமும் உண்டாகும். இதுவே உண்...ம். சரீ... புஷ்டியும்
மருந்துமாம். வாய்க்கு ருசியாகவும் ...யான ...ாதுபுஷ்டி
கட்டாயமல்ல. இச்சாபத்தியமிருந்தால் பிலி...கும். ... பத்தியம்
பிள்ளைகள் சாப்பிட்டு வந்தால் அடிக்கடி ... உத்த... ...
நேரிடாது. 20 வேளை சாப்பிடக்கூடிய மருந்...தியரிடம் போ... விலை ரூபா 2.
வி. பி. தபாலில் அனுப்பினால் ரூபா 2—4—0.

இலங்கையில் இங்கிருந்து போகும் மருந்து... அதிக ...
விதிப்பதனால் மணியார்டர் மூலமாக முன்ப... அனுப்பு
வோர்களுக்கு மாத்திரம் இலங்கைக்கு இந்த லேகி... அனுப்பப்
படும்.

இ. கண்ணப்ப முதலியார்,
நெ. 43, பாளையப்பன் வீதி,
சென்னை.

---

## தேவகோட்டை

## மெ. அரு. நா. சைவசித்தாந்த வித்தியாசாலை

இவ்வித்தியாசாலையில் மாணவர்களுக்கு சைவ சித்தாந்தக் கல்வி பயிற்றுவிக்கப் பெறுகிறது. இப்பொழுது சில மாணவர்கள் தாம் கற்க எண்ணிய நூல்கள் கற்று முடிந்தமையால் தமதிருப்பிடம் சென்றிருக்கின்றனர். புதிதாகச் சில மாணவர்களைச் சேர்ப்பதற்கு இடமிருக்கிறபடியால் சித்தாந்த சாத்திரம் பயில விரும்புவோர் தம்முடைய ஊர், பேர், முதலியவற்றையும் தாம் இதுவரை படித்திருக்கும் நூல்களையும் கண்டு ஸ்ரீமான் மெ. அரு. நா. இராமநாதன் செட்டியார் அவர்கட்குத் தெரிவித்து அவர்கள் அநுமதியின்பேரில் சேர்ந்து படிக்கலாம். வருபவர் சுத்தபோஜனமும் சிவதீக்ஷையும் உடையராயிருத்தல் வேண்டும்.

இங்ஙனம்:
போ. முத்தைய பிள்ளை.

# முப்பொருளுறவு

இப்புத்தகம், "நியு ரிபார்மர் பத்திராதிபர் D. கோபால செட்டி
யாரால் எழுதப்பட்டது. இதில் சைவ சித்தாந்தத்தின்படி, பதி, பசு,
பாச உறவை நமது சாஸ்திரங்களில் இதுவரையில் கூறியிராத அநேக
ஆச்சரியமான புதி கோட்பாடுகளைக்கொண்டு, கரதலாமலகம்போல்
தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது டன் அநேக நுட்பமான ஞான
விஷயங்களும் அடங்கியிருக்கின்றன. இந்நூலை சைவ சித்தாந்த சிகா
மணிகளாகிய திருவாளர் T. பொன்னம்பலம் பிள்ளை M.R.A.S.,
பாளயங்கோட்டை ப் காரியதரிசி, V. M. கல்யாணசுந்திரம்
பிள்ளை B.A., L.T., I. S. பூரணலிங்கம் பிள்ளை B.A., L.T.,
ள்ளை B.A. T. இராமலிங்கபிள்ளை M.A.,
மதி ஸ்டிஸ், சுகுணபோதினி முதலிய பத்திரிகை
முதலிய அநேகரும் ன்றனர். இதன் விலை அணா 8. வேண்டியவர்
களும் வியந்து ருக்கு எழுதவும்.
கள் யி கல்

D. கோபால செட்டி,

"நியு ரிபார்மர் பத்திராதிபர்" ஆரக்கோணம்.

---

# அறிவிப்பு

"சிவார்ச்சனா சந்திரிகை" என்னும் பெயருடைய நூல் ஒன்று ஸ்ரீ அப்பைய தீக்ஷிதரவர்களாலே செய்யப்பட்டு இதுவரை அச்சில் வாராமலிருந்தது. அதனை இப்பொழுது நம்முடைய சங்கத்திலிருந்து நாகரலிபியில் அச்சிட்டிருக்கிறோம். இதில் ஆத்மார்த்த பூசைக்குரிய எல்லா விஷயங்களும் அடங்கியுள்ளன. வேண்டுவோர் நமக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| கலிக்கோ பயிண்டு | ... ... | ரூ. 1—4—0 |
| சாதாரண பயிண்டு | ... ... | ரூ. 1—0—0 |

தபால் சார்ஜ் வேறு

இங்ஙனம்:
காரியதரிசி,

சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கம், தேவகோட்டை.

---

Printed at the Sadhu Press, Royapettah and Published by I. Authimoola Mudaliar, G. T. Madras.